412

R. No. M. 2445.

2 0 JAN 1931

உ

சிவமயம்.

வீரசைவம்.

திங்கள் வெளியீடு.

மலர் உ | பிரமோதூத—மார்கழி. 1930—டிஸம்பர். | இதழ் கஉ

க. ஸ்ரீபசவேசர் விஜயம்

உ. பாவலர் விருந்து

௩. பஞ்சகலசத் தாபனம்

௪. சிவானுபவம்

௫. ஆங்கில பாஷையின் பிரபாவமும், குருபக்தியின் இலக்கணமும்.

௬. காட்டக்கோட்டையர் புராணம்

௭. திருமுருகாற்றுப்படை.

அ. சென்சஸூம் வீரசைவரும்.

௯. முசிரி ஹை ஸ்கூல் திறப்புவிழா.

பத்திராசிரியர்: வீ. குமாரவீரையர், வீரசைவ நிலையம், முசிரி, (திருச்சி ஜில்லா.)

நித்தியானந்த அச்சுக்கூடம், பெரியகடைவீதி, துறையூர்—1931.

சந்தா நேயர்கட்கு விண்ணப்பம்.

ஐயன்மீர்!

நமது 'வீரசைவம்' என்னும் மாத வெளியீட்டின் 2-வது மலர் 12 இதழ்களும் இம்மாதத்துடன் முடிவுபெற்று, 1931-வது ஆண்டு 3-வது மலர் ஜனவரி முதல் தொடங்கப் பெற்று செவ்வனே நடைபெறும் ஏற்பாட்டுடன் இறைவன் அருளால் மலரும் தருணத்தில் இருக்கிறது. இவ்வாண்டில் சமயாசார தருமங்களுடன் உலகிற்கு இன்றியமையாத கல்வி, கைத்தொழில், வேளாண்மை, உத்தியோக முதலிய துறைகளில் முக்கியமானவற்றையும் காண்போர் களிக்கும்படி எழுதுவதாகவும், பொதுச் சந்தாதாரர்கட்கு வருடம் 1-க்கு 1–8–0 ரூபா வீதமும், மகா சங்கத்தின் நிரந்தர உறுப்பினராகிய சந்தாதாரர்கட்கு 2–0–0 ரூபா வீதமும், ஒரே தடவையில் ஐந்து சந்தாதாரர்களைச் சேர்த்து மணியார்டர் செய்பவருக்கு 1–0–0 ரூபா வீதமும் செலுத்திவர நிறைவேற்றற் கழகத்தார் சந்தா வீதத்தைச் சாதகம் செய்திருக்கின்றார்கள். ஆர்டர் செய்வோர் ஜனவரிமாதக் கடைசிக்குள்ளாக இத்துடன்வரும் அனுமதிக் கார்டில் எழுதியனுப்புதல் வேண்டும். பாக்கியுள்ள சந்தாதாரர்களும் தயைபுரிந்து அனுப்பி வைத்தல் வேண்டும். கட்டுரை எழுதுவோரும் மாதத் துவக்கத்திலேயே அனுப்பி வைத்தல் நலம்.

முதல் இரண்டு ஆண்டுகளின் 12 இதழும் அடங்கிய புத்தகம் கட்டடம் செய்யப் பெற்றுத் தயாரிலிருக்கிறது. விலை ரூபா 2–4–0. முன் ஆர்டர் செய்வோருக்கே புத்தகம் கிடைக்கும். கடிதம் எழுதுவோர் 2-வது ஆண்டின் சந்தா நெம்பரைத் தவிராது எழுதவேண்டும். இறைவனருள் முன்னின் றாக்குக!

இப்படி,
பத்திராசிரியர்.

உ

சிவமயம்.

20 JAN 1931

வீரசைவம்.

பிரமபுரம் ஸ்ரீ சிவஞானபாலைய சுவாமிகள் அருளால்

மகாசங்கத்தினின்றும் வரும்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

மலர் ௨.	பிரமோதூத — மார்கழி. 1930 — டிஸம்பர்.	இதழ் ௰௨.

(கடவுள் வணக்கம்.)

1 *பஞ்சாநந தநுத்பூதாந் பஞ்சாக்ஷர மநூபமாந்*
பஞ்சசூத்ர க்ருதோவந்தே பஞ்சாசார்யாந் ஜகத்குரூந்,

2 முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே — யொருகை முகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கா லெப்பொழுதும்
நம்பியே கைதொழுவே னுன்.

3 வெள்ள வேணிப் பெருந்தகைக்கி யாஞ்செய் யடிமை மெய்யாகக்
கள்ள வேடம் புனைந்திருந்த கள்வ ரெல்லாங் களங்கமறும்
உள்ள மோடு மெய்யடியா ராக வுள்ளத் துள்ளுமருள்
வள்ள லாதும் வசவேசன் மலர்த்தா டலையால் வணங்குவாம்.

4 பங்க வளற்று வழிமாற்றி யொருநல் வழியைப் பகர்வார்போல்
தங்கண் மதியிற் பலபிதற்றுஞ் சமய நுாைக டமைநீக்கி
அங்க நிலையிற் றிலிங்கநிலை யிற்றென் றருளும் வீரசைவ
சிங்க நிலைத்த வருட்சென்ன வசவன் றிருத்தாள் சிரத்தணிவாம்.

5 மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
இறைவர்தம் பெயரை நாட்டி யிலக்கணஞ் செய்யப் பெற்றே
அறைகடல் வரைப்பிற் பாடை யனைத்தும்வென் றரி யத்தோடு
உறழ்தரு தமிழ்த்தெய் வத்தை யுண்ணினைந் தேத்தல் செய்வாம்.

ஸ்ரீ பசவேசர் விஜயம்.

திருவாளர், G. C. வீரப்பா B. A., L. L. B. அவர்கள்.

உபதேசம்.

(முன் தொடர்ச்சி.)

மெய்யன்பர்களே! நாம் மதுபானஞ் செய்யாமை, சமயப் பற்றுடைமை முதலிய நல்லொழுக்கம் உடையவராயிருப்பினும் இவ்வுலகியல் குறைவின்றி நடத்தற்கேதுவாகிய வேளாண்மை, வாணிபம், கைத்தொழில் முதலியன நடைபெறுமல் குன்றுமாயின் நாம் மேற்கொள்ளும் உத்தம தருமங்க ளனைத்தும் நடைபெறுமல் குன்றிவிடும்; குன்றவே நாடும் நாடாகாது காடே யாகிவிடும். ஆதலின், நாடு நாடாகவும், தருமங்கள் நிலைபெறவும் முக்கியமாக வேண்டப்படுவன வேளாண்மை முதலிய தொழில்களேயென நீங்கள் உறுதியாகக் கைக்கொள்ளுதல் வேண்டும்.

அவற்றுள், வேளாண்மை யென்னும் உழவுத்தொழில் வேளாளர் என்னும் ஓர் சாதியார்க்கே உரியதென எண்ணுதல் ஆகா. அவ்வுழவுத் தொழில், தங்கள் வியாபாரத் தொழில் இடையறுது நடத்தற்குக் காரணமாய் இருத்தலின் வாணிகர்க்குச் சிறுபான்மையும், தங்கள் உபகாரச் செயலுக்கு முற்றும் வேண்டியிருத்தலின் வேளாளர்க்குப் பெரும்பான்மையும் உரியதாயினும் செய்விக்குங்கால் அரசர் அந்தணர் முதலாயினோர்க்கும் உரியதாகின்றது. உழவுத் தொழிலால் வரும் மெய்வருத்த முதலியன நோக்கிப் பிறதொழில்களிற் சென்று பெரும்பொருள் தேடியவரும் முடிவில் உணவின் பொருட்டு உழுவாரிடத்துச் செல்ல வேண்டியிருத்தலின் எவ்வகை வருத்தமுற்றுலும் உழவுத் தொழிலே ஏனைய தொழில்களினும் தலைமையாக விளங்குகின்றது. உழுவாருடைய கைம்மடங்கினல் யாவராலும் விரும்பப்படுகின்ற உணவும், பற்றுக்களை விட்ட துறவிகளுடைய நிலையும் இல்லாமற்போகும். ஆதலினல் உழவுத் தொழிலைக் கைக்கொள்பவர் தங்கள் விளைநிலத்தை நன்ருக உழுதல் வேண்டும்; உழுதபின் எரு

விடுதல் வேண்டும்; எருவிட்டபின் களையெடுத்தல் வேண்டும்; களையெடுத்தபின் நீர் பாய்ச்சல் வேண்டும்; இவற்றை யெல்லாஞ் செய்தலினும் இட்ட பயிருக்குக் கொடிய பிராணிகளால் தீங்குவராமல் காத்தல் முக்கியமாக வேண்டும். வேளாண்மை புரிவோரிற் சிலர் கௌரவத்தைக் கருதியோ சோம்பல் மிகுதியினாலேயோ தமது விளைநிலங்களை நேரிற்சென்று பாராது கூலியாட்களை விடுத்து நம்பியிருக்கின்றனர். ஓர் இல்லறைத்தான் நாள்தோறும் தன் மனையாளிடஞ் சென்று அவள் விரும்புவனவற்றைச் செய்யாது வேறிடத்திருப்பின் அவனுடைய மனையாள் தன்னுள்ளே வெறுப்படைந்து பிணங்கிக் கொள்ள அவன் அவளிடத்து எதிர்பார்க்கும் போகத்தை யிழத்தல் போல, நிலமகட் குரியவனாகிய வேளாளன் நாள்தோறும் தனது விளைநிலத்தின்கண் நேரிற் சென்று பார்த்து அதற்கு வேண்டியன செய்யாது இருந்தவிடத்தே சோம்பியிருப்பானாயின் அவ்விளைநிலம் தன்னுள்ளே வெறுப்படைந்து அவனுடன் பிணங்கி விளை பொருளாகிய போகத்தைக் கொடாது நின்றுவிடும். இன்னும் அந்நிலமகள் தன்னையடுத்து உழவுத்தொழில் செய்து வாழாது தரித்திரர் என்று சோம்பியிருப்போரைக் கண்டால் அவரது அறியாமையை நோக்கிப் பரிகாசம் புரிவள். ஆதலால் நீங்கள் உழவுத்தொழிலைச் சிறந்ததாகக் கொண்டு எல்லோரும் வாழ முயற்சி செய்தல் வேண்டும்.

பயிர்த் தொழிலுக்கு முக்கிய சாதகமாயுள்ளது பசு. அப்பசுக்களைத் தன்னுயிர் போலக் காத்தல் வேண்டும். கால மெல்லாம் உழைத்துத் தளர்ந்த நிலையில் அவைகளைக் கொலை புரிவோரிடத்து மறந்தும் விற்றுவிடலாகாது. உழவுத் தொழிலாளரே யன்றி மற்றவரும் பசுக்களிடத்து மிகுந்த அன்புவைத்தல் வேண்டும். உங்கட்குப் பால் கொடுக்கும் பசுக்களிடத்தே யன்றி மற்றப் பிராணிகளிடத்தும் அன்புவைத்தல் வேண்டும். தன்னலங்கருதி எவ்வுயிரையுங் கொல்லலாகாது. நம்மைப் படைத்த கடவுட்கு எல்லா வுயிரும் மக்களே. அவைகளுள் ஒருயிருக்குத் தீங்கு செய்வோமாயின் அவ்வுயிரைப் பெற்ற பிதாவாகிய கடவுள் நம்மைக் கோபிக்க மாட்டாரா? ஆதலால் நீங்கள் எவ்வித பலனைக் கருதியாயினும் பலியிடுதல் முதலிய கொலைத் தொழிலைச் செய்யாது நீக்குங்கள். சீவகாருண்யம் உடையவராகுங்கள். கருணைக்குப் பாத்திராக வேண்டுமானால் கொலையை நீக்குக.

கொலையை விடவேண்டுமானால் புலாலுண்ணலை ஒழிக. புலாலுண்ணலால் ஒருவர்க்குத் தேகபலம் வந்துவிடாது. புலால் உண்போரில் எத்தனையோ பேர் பலமற்றவராயும் நோயாளராயும் இருக்கக் காண்கின்றோம். காய் கனி வித்து முதலிய இயற்கைத் தாவரப் பொருள் உண்போரில் எத்துணையோ பேர் தேகபலம் உடையவராயும், எண்ணியதைச் செய்யும் ஆற்றலுடையவராயும் இருக்கக் காண்கின்றோம். ஆதலால் கேவலம் உடலை வளர்த்தற்கென்று மதிமயங்கிப் புலாலையுண்ணல் ஆகாது. புலாலைக் கருதி உயிர்க் கொலை புரியலாகாது. இறைச்சியின் சுவையால் கடவுளுக் கென்றும், தேவர்கட் கென்றும் பொய்யுரைத்துப் பலி யிடுதலையாவது கனவிலுஞ் சிந்தியாதீர்கள்.

"அம்மா வேனவலறக் கேட்டகன்ற மாதவர்க்குப்
போய்ம்மா நிரயமென்றால் இப்புன்புலையர்க் கேன்சொல்லுவதே"

என்னும் உபதேச மொழியைச் சிந்தியுங்கள்.

அன்பர்களே! இன்னும் சிலர் காடுறை விலங்குகள் போலப் பொறாமை முதலிய தீக்குணங்களால் ஒற்றுமையின்றிச் சண்டையிட்டுக் கொள்கின்றனர். பொய்வழக்கை மேற்கொண்டு கைப்பொருளையிழக்கின்றனர். வழக்கறிஞர்கட்கு அடிமையாகின்றனர். இவர்கள் காகத்தின் ஒற்றுமைக் குணத்தையாவது கண்டு திருந்தலாகாதா? அறியாது சண்டையிடுவோர் காகத்தினும் இழிந்தவரா? இல்லையேல் யாவரையும் தம் இனத்தாராகக் கருதி ஒருவர்க் கொருவர் ஒற்றுமையும் சகோதரபாவமும் உடையவராய் மனிதர்களென மதிக்கும்படி வாழ்தல் வேண்டும். யாவரும் பிறப்பு வகையில் ஒன்றாயிருப்பினும் சிலர் சாதிபேதங் கருதி வேற்றுமை பாராட்டுகின்றனர். சாதியென்பது தொழில்பற்றிப் பிற்காலத்து வந்ததேயன்றி என்றும் உள்ளதன்று. மனிதராகப் பிறந்தார் எக்குலத்தார் ஆயினுமென்? எத்தொழிலைச் செய்தாலுமென்? நல்லொழுக்கமும் கடவுளிடத் தன்பும் உடையவரெல்லாம் உயர்ந்தவரே. ஒழுக்கம் அற்றவரும் பிறவுயிரை வருத்துபவரும் இழிந்தவரே. சிவசம்பந்தம் உடையோ ரெல்லாம் பெரியோரே. அஃது இல்லாதோ ரெல்லாம் சிறியோரே. சிவபக்தர் எவராயினும் அவரெல்லாம் போற்றத் தகுந்தவரே.

முற்பிறப்பிற் செய்த புண்ணிய விசேடத்தால் ஒருவன் மகுடஞ் சூட்டப்பெற்று ஓர் நாட்டிற்கு அரசனாகவரின் அவன் எக்குலத்தான்

ஆயினும் அவனுக்கு யாவரும் மரியாதை செய்கின்றனர் அல்லவா? அதுபோல, ஒருவர் எக்குலத்தவராயினும் சீலமுடைய சிவபக்தராய் விடின் அவர்க்கு யாவரும் மரியாதை செய்தல் வேண்டும். மற்றை யோரினும் முன்னமேயே சீலமுடைய குலத்திற் பிறந்து சிவவேடத் தின் பெருமையை யறிந்தவர்களே சிவவேடந்தாங்கிப் புதிதாக வரும் சிவபக்தரைப் பரிவுடன் உபசரித்தல் வேண்டும். உண்மையாளர்களே! நமது நாட்டில் பரம்பரைச் சைவர், இடைக்காலச் சைவர், நேற்றைய சீலரெனத் தற்புகழ்ச்சி செய்துகொள்ளும் குறையொன்று நிரம்பியிருக் கின்றது. அறிஞராயுள்ளவர் அதனை அறவே ஒழித்தல் வேண்டும். அம் மட்டிலுமா மதபோதனை செய்பவராயுள்ள மடாதிபதிகளும் தம்மைத் தாமே மதித்துக்கொண்டு பிறரை இகழ்ந்து உரைக்கின்றனர். தமக் குக் கிடைத்த இகபோகத்தால் தம்மைத் தாமே மதித்துக்கொண்டு சமயப் பிரசாரஞ் செய்யாது தூங்குகின்றனர். முற்காலத்தில் இப் படிப்பட்ட குறுகிய எண்ண முடையார் இருந்திருப்பாராயின் மட மெங்கே? பல்லக் கெங்கே? பிருதுக ளெங்கே? இவை யனைத்தும் சமயப் பிரசாரஞ் செய்யும் பெருந் தகைமையைக் கண்டல்லவா அரசர் முதலியோரால் கொடுக்கப் பெற்றன. முற்காலத்தில் எத்தனையோ விபூதிகள் இப்பாரத நாட்டில் உதித்ததுவும் இக்குலச் செருக்கை ஒழித்தற்கல்லவா? ஆதலால், ஒருவரையாவது குலத்தால் இழிந்தவ ரென்று அவமதிக்கலாகாது. அவர்பால் குறையுளதேல் நல்வழியில் உபதேசித்து இதமாகத் திருத்த முயற்சிக்க வேண்டும்.

கற்றறி வுடையோரே! கல்வி ஞானமின்றி அஞ்ஞானத்தால் மூடப்பட்டுப் பலர் சிறுகிராமங்களில் வசிக்கின்றனர். அறிஞராயுள்ள நீங்கள் கோதற்ற அச்சகோதரர்களுக்கு எளிதில் விளங்கும்படி நன் னெறியைப் புகட்டி அவர்க்கு ஞானதானஞ் செய்யுங்கள். இதனால் அவர்க்குப் பெருத்த நன்மை யுண்டாவதே யன்றி உங்கட்கும் தக்க பயனுண்டாகும். பணமோ கொடுக்கக் கொடுக்க ஒருகால் குறைவு படலாம். கல்வியோ கொடுக்கக் கொடுக்கப் பெருகிவந்து இன்பத்தை விளைவிக்கும். அன்னதான முதலியவை அன்றைக்கு மட்டிலுமே மகிழ்ச்சியை யுண்டாக்கும். ஞானதானமோ சிலநாளில் அழியாது; ஆயுளுள்ளவரையும் பெரும் பயனைத்தந்து மீண்டும் எழுமையும் உதவ வல்லது. ஆதலால் ஒவ்வொருவரும் தம்மால் இயன்றவரை ஏழைச்

சிறுவர்களுக்குக் கல்வித் தானமும், முதியவர்களுக்கு ஞானதானமும் செய்து உபகரித்தல் வேண்டும். இத்தானத்தை எப்பொழுதும் மறந்து கைவிடாதீர்கள்.

தேசத் தொண்டர்களே! இவ்வுலகில் பகல் இரவு மாறிக் கொண்டே வருதல்போல இன்ப துன்பங்கள் மாறி வருகின்றன. ஒவ்வொருவருக்கும் ஓர்வித துன்பமுண்டு. அரசனுக்காயினும் அவனால் ஆளப்படும் குடிகளுக்காயினும் ஓர்வகை துன்பமுண்டு. இங்ஙன மிருப்பதுவே ஈசுவர சிருஷ்டியின் அற்புதச் செயல். துன்ப மில்லையேல் இன்பமில்லை. துன்பம் வந்தபொழுது அதற்குப் பின்னடையாது தாம் மேற்கொண்ட தருமத்தை விடாது ஊக்கத்துடன் நிற்க வேண்டும். நிற்பரேல் அத்தருமம் இன்னும் மாற்றுயர்ந்ததாகும். நற்காரியத்தைச் செய்யத் தலையிட்டுக் கொண்டவர்கட் கெல்லாம் கெடுதியைச்செய்யப் பொறுமையினல் முற்படுவோர் பலர். இது உலகியலே யன்றிப் புதிதன்று. இதற்காக யாரும் பின்னடையலாகாது. இப்பொழுது என்மேலும், யான் செய்த செயல்களின் மேலும் பலர் குற்றஞ் சாற்றினர். அதனல், எனக்கு யாதொரு அச்சமுமில்லை. என் செயலுக்கோர் குறையுமில்லை. ஆனல் அவர் மேல் எனக்கு விரோதம் உண்டோவெனில் அதுவுமில்லை. எவ்வெக் காலத்தில் கடவுளருள் எவ்வெப்படி யிருக்கின்றதோ அவ்வப்படியே நடக்கவேண்டும். ஆதலால் என்னைப் பற்றியாவது பிறரைப் பற்றி யாவது நீங்கள் கவலைப்படாதீர்கள். நான் இவ்வுலகில் பிறந்ததற் கேற்பவும், திருவருள் துணைநின் றியக்கியதற் கேற்பவும் இயன்ற சேவைகள் செய்துள்ளேன். எவ்வித இடையூறு நேர்ந்த காலத்தி லும் எனக்குத் துணையாய் நின்ற கடவுளை மறந்தவனல்லன். இப் பொழுதும் மறப்பேனில்லை. இனி அவனடி சேர வேண்டியதுதான் எனது கடமை! ஆதலால் யான் இதுவரையும் கூறிய உபதேசங்களை மறவாது நடப்பிப்பதே நீங்கள் என்மாட்டு மறவாது செய்யவும் செய்ந் நன்றியென யான் கருதுவேன். நீங்கள் இனி எனக்கு விடைகொடுப் பீர்களென எண்ணுகின்றேன்; என நம் பசவேசர் அங்கு நிறைந் திருந்த பக்தர்களை வினயமாக வேண்டிக் கொண்டனர்.

இங்ஙனங் கேட்டுக்கொள்ளவே, இதுகாறும் அமைதியுடன் வேறு நாட்டமின்றிக் கேட்டுக்கொண்டிருந்த பக்தர்களெல்லாம் கன்றுபிரி

காராவின் மனங் கரைந்துருகித் துன்பக்கடலுள் ஆழ்ந்தவராய் ஒருவாறு தெளிந்து எமது அன்பின் வெள்ளமே! உமக்கு இடையூறு செய்யக் கருதிய விச்சல மன்னனை இப்பொழுதே வதைத்து விடுகின்றோம். அவர்க்காக எங்கள் நாட்டை விட்டுப் போதல் கூடாது. எங்கள் பக்கத்தே யிருந்து எப்பொழுதும் இதோபதேசம் புரிந்து கொண்டே யிருத்தல் வேண்டும். உங்களை விட்டுக் கணப்பொழுதும் பிரிந்திரேம்; என்று ஒரே மொழியாய்க் கடலொலி போலக் கூவி நின்றனர். அதனைக் கேட்டார் நமது கருணைக் கடல். சிவ! சிவ!! என்றுசொல்லி இருகைகளால் இரண்டு காதையும் மூடிக்கொண்டனர். சிறிது நேரம் தாழ்த்திருந்து கூட்டத்தார் அமைதியுற்ற பின்னர் அவர்களை நோக்கி, ஓ பக்த சிகாமணிகளே! உங்கள் வாக்கு என் காதுக்குக் காய்ச்சிய அம்பு போன்றுளது! யான் இதுவரையுங் கூறியவற்றை யெல்லாம் மறந்து விட்டீர்கள்! எப்பொழுது சீவ இமிசைசெய்யக் கூடாதென்றும், தீமை செய்தோருக்கும் நன்மையே செய்தல் வேண்டுமென்றும், நாம் நமது கடமையைச் செய்தற்குச் சாத்வீக எதிர்ப்பையே கைக்கொள்ள வேண்டுமென்றும், கை கூடாத பொழுது மனத்தை யடக்கி மௌனநிலை சாதிக்க வேண்டுமென்றும், மக்களாகப் பிறந்தவர் அனைவரும் கடவுட்குப் புத்திரரா யிருத்தலினாலும், அக்கடவுட்கே அங்கமா யிருத்தலினாலும் நாம் நம்மில் ஒருவர் அறியாமையினால் தீங்கு செய்வாராயின் அவரது அறியாமைக்கு இரங்க வேண்டுமே யன்றி அவரை வெறுக்கலாகா தென்றும், இவை யெல்லாம் உலகியற்கையே என்றும் கூறியுள்ளே னல்லவா? அவற்றை யெல்லாங் கேட்டுக்கொண்டிருந்த நீங்கள் இப்பொழுது மன்னன்மீது கோபங் கொள்ளலாமா? அவரைத் துன்புறுத்த நினைக்கலாமா? யார் எதைச் செய்தாலும் தருமம் சத்தியம் நிலைப்படுமே யன்றி அதருமமும் அசத்தியமும் நிலைபெற மாட்டாவன்றோ? அறியாமை காரணமாக ஒருவர் ஓர் தீத்தொழிலைச் செய்தாராயினும், அறிவுடையோரும் அவரை வெறுத்துத் தீங்கு செய்யப் புகுவது மானிட தருமம் அல்லவே? அதிலும் சீவகாருணியத்தைச் சிறந்த தருமமாகக் கொண்டு சகோதர பாவனையைச் சிறந்த அஸ்திவாரமாக நாட்டி, எங்கும் ஒளி வடிவாயும் ஆனந்த ரூபமாயும் நிறைந்திருக்கும் பரஞ்சோதியாகிய ஒருவரிடத்தில் நம்பிக்கை வைத்து, பொய் அசத்தியம் என்பனவற்றை அகலத்துரத்திச் சத்தியத்தைப் பிடித்து நிர்ப்பயமாய்

நிற்கும் சிவபக்தர்களுக்கு அரசனை ஏதோ.........என்று செய்வோ மென்று கூசாது கூறுவது எள்ளளவுந் தகாத காரியம் அல்லவா? அத்தீச்செயலை நீங்கள் மறந்தும் கூறத் துணியலாமா? அது உங்கள் பெருந் தன்மைக்கு அழகல்லவே? இனி என்னுடைய சொல்லில் நம்பிக்கை யிருக்குமேல், என்பால் உங்கள் அனைவருக்கும் உண்மை யான அன்பிருக்குமேல் அரசர்க்காயினும், அவரைச் சார்ந்தவர்க்கா யினும் யாதொரு இடையூறும் செய்யாதிருப்பீர்கள். இங்ஙனம் வாக் குறுதி கொடுப்பீரேல் எனது ஆத்மா சாந்தியை யடையும் என உருகிய மொழியாற் கூறவே யாவரும் ஒருமனப்பட்டு அங்ஙனமே யாகுக! எங்கள்பால் நீங்காத கருணை யிருத்தல் வேண்டும் என வேண்டிக்கொண்டனர்.

வேண்டிக்கொள்ளவே நமது அன்பின் பெருக்கும் விடைபெற் றுக்கொண்டு தனது ஐக்கியத் தானமாகிய கூடல சங்கமேசத்திற்குச் சென்றது. வானவர் பூமழை பொழிந்தனர். எங்கும் பேரொளி மயமாக விளங்கிற்று. அன்றுமுதல் உத்தமத் தருமமாகிய சீவகா ருணியத்தையே மேற்கொண்ட வீரசைவ சமயம் உலகம் எங்கும் பரவி விளங்கிவருகின்றது.

பாவலர் விருந்து.

திருவாளர், ஆசிரியர் அ. வரதநஞ்சய பிள்ளையவர்கள்.

(201-ம் பக்கத் தொடர்ச்சி.)

வேறெந்தப் பாவலரும் கருதி அமைக்க முடியாத வண்ணம் பல அடியார்களின் சரித்திரங்களையோ, அப்பகுதிகளையோ எடுத்துக் கொண்டு தற்குறிப் பேற்றம் உருவகம் முதலிய அணிகளை அவற் றோடு கலந்து பத்திச்சுவை முதிரும் வகையில் கவிஞர்கட்கு விருந் தளிக்க வல்லவர் நமது அடிகளார் மேற்கோளாகச் சிலகூறி அவர் நம்மனோர்க் கமைத்த விருந்தைப் பகிர்ந் தளிப்போமாக.

நால்வர் நான்மணிமாலையில், திருஞான சம்பந்தப் பெருமானர் சமணரோடு வாதுநேர்ந்த காலையில் வையை நதியிலிட்ட ஏடு எதி ரேறப்புரிந்த கதைப்பகுதியை மேற்கொண்டு தொனியின்பம் பயக்கச் சுவையூட்டி யமைக்கின்றார்.

"கொள்ளை கொள்ள வீடுதவிக் கூற்றைப் பிடர்பிடித்துத்
தள்ளுந் திருஞான சம்பந்தா—வெள்ளமிடு
மேடேறப் பால்குறைந்த தேன் றழுவ ரேகழுவின்
காடேறப் புக்கவரு கர்"

திருநல்லூர்ப் பெருமணத்தில் உமது திருமணம் விரும்பிக் குழுமிய யாவர்க்கும் சிவலோகத்தைக் கொள்ளை கொள்ள வழங்கி, நமனை இங்கணுகற் பாலையல்லை, எனப் பிடர்பிடித் துந்திய திருஞானசம்பந்தப் பெருமானீரே! மதுரையில் சமணர் வாதிட்டு நும்முன் முரணியஞான்று, நீர் வையை வெள்ளத்திலிட்ட ஏடு, அவர்களிட்ட ஏடுபோல் நீரின் செல்காற் செல்லாது, எதிரேறிய அக்கணத்தே தாம் முன் ஒட்டிய வஞ்சினப்படித் தாமே துணிந்து கழுவேறப்புக்க அருகர்கள், தம் விதிகுறைந்து பொன்றுநாள் தந்ததே என்றழுதன ரன்றோ? எனச் சரிதப் பகுதியைச் சுட்டிப் பாராட்டுகின்ற போக்கில், 'ஏடேறப் பால் குறைந்த தென்றழுவார்—அருகர்' என ஓர் தொனி சிறப்ப உரைத்தருள்கின்றார். பால் என்பது, விதி அல்லது ஊழ் அதிர்ஷ்டம் என்னும் ஒருபொருட் பன்மொழிகளுள் ஒன்று, ஏடு என்பது பாலைக் காய்ச்சுகையில் உண்டாம் ஆடையையும் குறிக்கும் பலபொருளொரு சொல், பாலைக் காய்ச்சக் காய்ச்சப் பால் குறைதலும், ஏடு (ஆடை) ஏறு (அதிகமா)தலும் கண்கூடு. பால்குறைய ஏடு ஏறுதல் இங்ஙனம் இயற்கைதானே. அவர்கள் அழுதது எற்றுக்கு? என நயம் பிறக்கு மாறு கூறும் கற்பனு சக்தியைப் பிறர் யாரிடம் காணக் கடவேம். அருகர் பால் குறைய நம் பிள்ளையார் ஏடேறிற்று, என்று நுன்மதி கொண்டு கருதிக் கண்ட அவரது ஆழ்ந்த கருத்து, பலபடப் பாராட்டிப் புகழத் தக்கதன்றோ!

திருநாவுக்கரையர், அப்பூதியடிகள் குமாரனூர் மூத்த திருநாவுக்கரசு வாழையிலை கொணரச் சென்று, அம்மரத்தின்மீது மாசுணந் தீண்ட மாண்டவரை, உயிர்ப்பித்தார் என்ற சரித்திரத்தை ஞாபகத்திற் பதித்துக்கொண்ட நமது பெருமானூர், அச்சரிதம்போல வேறு ஒரு சரித்திரங் கற்பித்து, மூத்த திருநாவுக்கரசு பெற்ற பெரும்பேறு யார்க்கும் கிட்டுவதரிதே என முடிக்கின்றார்.

"துடைவாழை மேன்மடவா ரல்குற்பாம்பு தோடமயங்கி
நடைவாய் பிணமெனப் பட்டார் பெறுகிலர்..........."

மூத்த திருநாவுக்கரசு ஓர் வாழையின்மீது பாம்பு கடிக்க மாண்டார். பல மக்களும், மாதர்கள் துடை என்கின்ற வாழையின்மேல் இவர்ந்து அதற் கணித்தாயுள்ள அல்குல் என்னும் சர்ப்பத்தாற் கடியுண்டு நடைப்பிணமாக மாண்டுள்ளார் என்றாலும், நம் மூத்த திருநாவுக்கரசு, தாண்டகவேந்தராம் திருநாவுக்கரசர் திருக்கரந் தீண்டப் பெற்றுய்ந்தவாறு உய்யக் கடவரோ? உய்வாரல்லர். என மொழிந்த உருவகம் எத்தனை வியப்பும் உவப்பும் உடையதாகி நம்மை மகிழ்விக்கின்றது பார்மின்! மாதர்களின் துடை வாழையையும், அல்குல் பாம்பையும் நிகர்க்குமென்ற உவமையை உருவகப்படுத்தி அதனோடொருபுடை ஒப்புவமையுடைய வாழைமேல் அரவந் தீண்டிய கதையைப் பொருந்த ஒப்பித்து, அரவந் தீண்டப்பட்டோர் மாண்டதையும் அவருள் ஒருவர் மட்டும் உயிர்த்தெழ மற்றையோர் பிணமாதலைக் குறிப்பிட்டும் அருள்கின்ற ஆராவமுதன்ன இக்கவியின் அமைப்பு நயம் மெச்சத் தக்கதேயாம்.

இனி நம்பியாரூரர், புக்கொளியூர் அவிநாசியில் முதலை யுண்ட பாலனைமீட்ட சரிதத்தை நினைவு கூர்ந்து அதற்கிணங்கத் தாமொரு குளமும் முதலையும் பார்ப்பனச் சிறுவனும், கூற்றுவனும், குளக்கரையும் அப்பார்ப்பன மகவின் தந்தையும் உருவகத்தால் தோன்ற சிருஷ்டித்து, சுந்தரமூர்த்தி சுவாமிகளை விளித்து நேர்முகமாக்கி, முன்பு நீர் எவ்வாறு ஒரு பிராமணச் சிறுவனை முதலை வாயினின்றும் மீட்டீரோ? அங்ஙனமே இன்றும் ஒருசிறுவன் கராம் வாய்மடுப்ப மறைந்துள்ளான் அவனையும் உமது கைகண்ட அநுபவங்கொண்டு மீட்டுத் தருதல் கடனேயாம் என விநயமாகச் சித்தாந்தப் பொருள் தத்துவத்தோடு விளங்க அருளிச் செய்கின்றார்.

வாங்குசிலை புரையு முடலெனுங் குளத்தின் மூல
மலமெனுமோர் வெங்கரவின் பகுவாயி னின்றுந்
தீங்கிலுயி ரெனும்பனவக் குலமகனை யாதி
திரோதாயி யென்னுமொரு வெந்திறற்கூற் றுவனு
லோங்குறுநா தாந்தமெனப் பேயரியவக் கரையி
லுமிழ்வித்துச் சிவமெனுமோர் தந்தையொடுங் கூட்டாய்,
.................................அருட்கடலே.

குண்டையூர் கிழார் கொடுத்த நென்மலைகளை கட்டித்தரும்படிச் சிவபிரானை வேண்டிப் பூதகணங்களைப் பணிகொண்ட அருள்வாரிதியாம் ஆளுடையநம்பி வருக! நீர் முதலையுண்ட பாலனை அழைப்பிக்க வல்லீர் என்று அறிந்துள்ளேம். இங்கொரு முதலையுண்ட பாலனும் உளன். அவனையும் முன்போலவே கைவந்த வித்தையால் வருவித்தருளல் உமது தீராக் கடமையாக வுள்ளது. உடல் என்ற குளத்தில் ஆணவமலம் என்னும் மிகக் கொடிய முதலை ஆன்மா என்னும் பார்ப்பனக் குழவியை விழுங்கியுமிழ்ந்து வயிற்றுட்கொண் டிடுமாப்புறுகின்றது. அதன் வாயினின்றும் அம்மதலை உயிருடன்வர திரோதாயி என்னும் மறைப்புச் சக்தியை ஏவி அம்முதலை வாய்திறந்து கக்குமாறு கடாக்ஷித்து சிவபரம்பொருள் என்னும் வேதியரோடு அவர் உரிமை மகவாம் அக்குழந்தை தலைக்கூடி இன்புறும் வண்ணம் நாதாந்தம் என்னும் குளக் கரையில் சேர்த்துவிடக் கடவீர். என்றிப்படிக் கோவையுற அடுக்கிப் பொருத்தும் அரும்பெறல், கவித்திறம் வேறெங்குக் காண்போம். பார்மினோ! பார்மினோ! நம் சிவப்பிரகாச வள்ளலார், அடியார் திறத்தும் சமயகுரவர்கள் திறத்தும் அன்பு பெருக உளங்கனிந் துருகவைத்த பெருங்காதல் கரைகாணாப் பரவையினும் பெரியதேயாம். பல அற்புதங்க ளியற்றிய சமயாசாரிகளின் இயல்பை ஓர்ந்து சிந்திப்பர். அவற்றுள் ஒன்றை மிகமேம்பாடு உடையதென்று தமக்குள் மதிப்பர். அம்மதிப்பை வெளிக்கூற முயல்வர். முயன்றும் அவ்வாறு கூறில் ஒருவரை மதித்துப் புகழ்தலினால் ஏனையோரைக் குறைபாடு கூறியதாக முடிந்து அபகாரம் வருமோ என்றஞ்சுவர். அஞ்சி அதைத் தாம் கூறாது உரியாரை வினவுவார்போல் சமிக்கை காட்டிவிடுவார். யார்க்குவரும் இத்தகைய அருமை நயங்கள்? ஒன்று கூறிக் காட்டுகிறேன். உய்த்துணருமின்.

போதமுண்ட பிள்ளை யென்பு பொருகண் மாது செய்ததோ
காதல்கொண்டு சொல்லின் மன்னர் கன்மிதப்ப வுய்த்ததோ
வாய்திறந்து முதலை கக்க மகனைநீ யழைத்ததோ
யாதுநம்பி யரிதுநன் கெனக் கியம்ப வேண்டுமே.

தம்பிரான் றோழராம் நம் சுந்தரமூர்த்திகளை நோக்கி நமது சிவப்பிரகாசமூர்த்தி ஒன்று வினவுகின்றார்.

"நம்பி ஆரூர! திருஞான சம்பந்தப் பிள்ளையார் திருமயிலாப் பூரில் சிவநேசச் செட்டியாரின் இறந்துபோன புதல்வியின் எலும்பை மீட்டும் பெண்ணாகச் செய்த அற்புதமோ? திருநாவுக்கரசர் கல்லையே தெப்பமாகக் கொண்டு கடல் நீந்திக் கரை சேர்ந்த அற்புதமோ? தேவரீர் முதலையுண்ட பாலனை நெடுநாட்குப் பின் வாய்திறந்து கக்கு மாறு செய்து அழைப்பித்த அற்புதமோ? இம்மூன்றனுள் எது மிக வும் அரிய பெரிய அற்புதம்! தயைகூர்ந்து தெளிவுபெற எனக்குச் சொல்ல வேண்டுகின்றேன்" என்கின்றார். இதில் நமது அடிகள் கருதியது என்னை? என்பதை நாம் உணரச் சில குறிப்புக்கள் உள் ளன. பிள்ளையார் என்பைப் பூம்பாவை யாக்கினார். நாவரசர் கல்லைத் தெப்பமாகக் கொண்டு கடல் கடந்தார். ஆகவே இவ்விருவர்க்கும் முதற்கருவியாக முறையே என்பும் கல்லும் உளவாயிருந்தன. நம் வன்றொண்டர் பெருமானார்க்கோ ஒரு கருவிதானும் இல்லை, முத லாவது அக்குளத்தில் நீரே இல்லை, என்றால் முதலை எவ்வாறிருக் கும்! அது எவ்வாறு அங்கு வரும்? வரினும் சிலவாண்டுகட்கு முன் உண்ட பாலனுடம்பு எங்ஙன் வாய்வழி வரும்? வரினும் அக்கூட்டி னுள் ஆவி எங்ஙனம் தலைப்பெய்யும்? இதனை உன்னின், நம் சுந்தரப் பெருமான் செயலே அருமையினும் அரிய பெரிய அற்புதம் எனக் கொண்டு, போதமுண்ட பிள்ளை என்பதை அடுத்து "என்பு" என் னும் சொல்லையும், சொல்லின் மன்னர் என்பதை அணுக "கல்" என்னும் சொல்லையும் இயைத்துவைத்து அவ்விருவரையும் குறிக்கும் வரிசையில் இக்கவியை வைத்தோதாது சுந்தரமூர்த்தியடிகளைக் குறிக் கும் வரிசையில் வைத்து அவரையே எது அரிது? என வினவிய அடிகளின் ஆழ்ந்த—செவ்விய—ஆன்றமதி நுட்பம் நூலோடுடைய பெருந்திறலை வியந்து எத்துதற்கு நாவாயிரமிலேம். என் சொல்கேம்? இஃதொன்றோ, திருஞானசம்பந்தரை நோக்கியும் ஒருவினா விடுக்கின் றார். அதுவும் இஃதொப்ப தொன்றே.

இலைபடர்ந்த பொய்கை யிடத்தழுதல் கண்டு
முலைசுரந்த வன்னையோ முன்னின்—நிலைவிளம்பக்
கோங்கை சுரந்தவருட் கோமகளோ சம்பந்தா
விங்குயர்ந்தார் யார் சொல் லெனக்கு.

திருஞான சம்பந்தர் பொருட்டுப் பால்சுரந்த அன்னைமார் இருவர் உளர். அவருள் உமாதேவியார் ஒருவர், மற்றவர் மங்கையர்க்கரசியாராம் பாண்டிமா தேவியார். இவருள் யாவர் உயர்ந்தவர் நீரே கூறும், என்று பிள்ளையாரையே வினவுகின்றார். நமது அடிகளுக்கு யார் உயர்ந்தவரென்று கருத்தோ அதனைக் குறிப்பால் உணர்த்தச் சிற்சில சொற்களைப் பெய்து வைத்திருக்கின்றார். தோணிபுரத்தில் திருக்குளத்தின் கரையில் அவர் அழுவதை நேரிற்கண்டு அதன்பின் முலைசுரந்தார் உமாதேவியார்; அவரது நிலைமையை வழிப்போக்கர் ஒருவரால் கேட்ட அக்கணமே கொங்கை நிரம்பப் பால் சுரப்பாராயினர் பாண்டிமா தேவியார். ஆதலின் அம்மங்கையர்க் கரசியாரே உயர்ந்தார் என மதித்தும் அஃது உமாதேவியாரைக் குறைகூறும் அபகாரமாய் முடியும் பொது நோக்கால் உணர்வார்க்கு; என அஞ்சுவாராகி, இரு தாய்மாரின் நிலைமையையும் நேரில்கண்ட அவரையே கூறுக என்று வினவிவிட்ட பெருந்தகைமை நிறைந்த அரும்புலமை நம்முள்ளத்தை உவப்பேற்ற வல்லதேயன்றோ!

நவநவமான கற்பனைகள் தோன்ற அற்புதக் கவிகள் சொல்லற்கென்றே அவதரித்த நம் அடிகளார்க்கு உலகிய லறிவு எவ்வளவு நிரம்ப இருந்தது என்பதை இனிச் சிந்திப்பாம். பெரியநாயகியம்மையைக் குறித்துப் பாடும் கலித்துறைகளில் ஒன்றில் கூறுகின்றார். "அம்மையீர்! நும்மைப் போன்று கள்ளங் கபடமற்ற தூயசிந்தை வாய்ந்த பெண்கள் யாருமிலர். உத்தம குணமுடையார் தம்மைப் போலவே பிறரும் நடப்பார்களென்று நம்பிச் சிலரால் சில பல சமயங்களில் ஏமாந்து போவதுமுண்டு. இவ்வாறு ஏன் தங்களோடு கூறுகின்றேன் என்பதற்கும் காரணம் இல்லாமற் போகவில்லை. நீங்கள் உமது கணவராம் பரமசிவம் ஏகபத்தினி விரதராகவே யிருக்கின்றார். உம்மைவிட யாரையும் விரும்புவாரல்லர் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றீர். அந்தோ! பாவம். கறுத்ததெல்லாந் தண்ணீர் வெளுத்ததெல்லாம் பால் என்று கொள்ளும் உமது இயற்கை உம்மை வஞ்சிக்கின்றது. அன்றொருநாள் உமது கொழுநர்—திருப்பூவணத்துக்கு—போய் என்ன செய்தார்—தெரியுமா?—அதை என்ன சொல்வது? அடடா! என்ன நம்பிக்கை மோசம்?—நான் சொல்லக் கூடாது என்றாலும் தாய்க்கொளித்த சூலா? சொல்லிவிடத்தான்

வேண்டும்? சொன்னால்—அப்பா! உங்கள் மனம்—என்ன ஆகுமோ? அஃதிருக்கட்டும். உங்கட்கு மிகவும் உருசிகரமான ஊடலுக்கு அடிப் படையாகவுள்ள அச்செய்தியைச் சொல்லும் எனக்கு—என்ன பரிசு தருவீர்? குழந்தைகளால் அரிய ரகசியங்களை அறிந்துகொள்ளும் தாய்மார்கள், அக் குழந்தைகட்கு வேண்டிய என்னென்ன வெல் லாம்—கேட்டது கேட்டபடி—கேட்கு முன்பே தருவார்களே! நீங் கள் என்ன தருவீர்கள்? அதனை முன்னே தெரிவியுங்கள். அதன்பின் ஒளிப்பேனோ? உள்ளதை உள்ளவாறே வெளியிட்டு விடுகிறேன். அப்பா என்னைக் கடிந்துகொண்டாலும் கொள்ளட்டும்; பயப்படேன். அருள், தங்கட்குரிய பொருளாக இருக்க நான் அஞ்சக் காரணம் இல்லை,'' என்றிவ்வாறு அன்பு கனிந்த அன்னையின்பால் கொஞ்சிப் பேசுங் குதலை மொழிச்சிறுர்போல் நம் கவிப் பெருஞ் செல்வர் பேசு கின்ற நயப்பாடும், அம்மையார் இன்னருளால் முத்தியை யடைய விரும்பி நிற்கும் வேட்கையும், கற்குந் தோறும் நம் கல்நெஞ்சைக் கரைக்க வல்லதா யமைந்துள்ளது. 'இறைவன் திருப்பூவணம் என் னும் நகரில் பொன்னனையாள் என்னும் ஒரு தாசியின் வீட்டிற்குச் சென்று இரசவாதம் செய்து அவள் வீட்டுத் தட்டுமுட்டுச் சாமான் களைப் பொன்னாக்கித் தந்த அதனால் அவள் இறைவனுருக் கண்டு அழகிய பிரானிரோ என்று கன்னத்தைக் கிள்ளி முத்தமிடப் பெற்று அந்நகத்தழும்பு கன்னத்தில் இன்னும் விளங்கவுள்ளார் என்னும் திரு விளையாடல் புராணத்தின் இரசவாதம்செய்த விளையாடலை நினைவுட் கொண்டு தாசி வீட்டுக்குச் சென்று தொட்டவனைத்தும் பொன்னுக்கு வித்துக் கன்னத்தே நகக்குறி கொண்டு விளங்குவதைச் செப்பி அத னால் உமாதேவியாருக்கு ஊடல் நிகழ வழிகூறி, அம்மகிழ்ச்சியால் தமக்கு வேண்டிய முத்தியை எளிதாகப் பெற்றுக்கொள்ள முற்பட் டார்போலக் காட்டும் உலகியலறிவு எவ்வளவு புகழ்ச்சிக் குரியது, என்று நோக்குமின்! இப்பொருளை அடக்கிக்கொண்டுள்ள கவி இஃது,

நின்னேய நாயக னென்றிருப் பாய்நினை நீத்தகன்று
தன்னேரில் பூவணத்தே யன்றுபோய்ச் செய்த தன்மையெல்லாம்
சொன்னே னலேனினி நின்னுே டொளிப்ப தேன்சொல்லுவே னியான்
பின்னே தேனக்குத் தருவாய் தென்குன்றைப் பெரியம்மையே.

(தொடரும்.

பஞ்ச கலசத் தாபனம்.

வேதாகம உடன்பாட்டினராகிய ஒவ்வொரு பாரத நாட்டினரும் அவ்வக் காலங்களில் தமது நிலைமைக் கேற்றவாறு சோடச சமஸ் காரங்களைச் செய்துகொண்டு தமது ஆத்மாவைப் பரிசுத்தமாக்கிக் கொள்ளுதற்கு உரிமையுடையவ ராகின்றனர். இந்தச் சோடச சமஸ் காரங்கள் வைதிக மதங்கள் அனைத்திற்கும் பொதுவாக உரியன வாயினும். ஒவ்வொரு மதத்திற்கும் சிறப்பான கருமமென ஒவ்வொன் றும் அந்தந்த மதாசாரியர்களால் கூறப்பட்டுள்ளன.

இந்த வீரசைவ மதத்தினராகிய அந்தணர்களிடத்தில் நடை பெறுகின்ற சோடச சமஸ்காரங்களில் எல்லாம்: மற்றவர்க்கில்லாத பஞ்சகலசத் தாபனமென்னும் சிறப்புவிதி யொன்று தள்ள முடியாத படி சேர்க்கப் பெற்றுள்ளது. விவாக காலத்திலும் பஞ்சகலசத் தாப னஞ் செய்தல் வேண்டும்; ஜாதகர்மத்திலும் பஞ்சகலசத் தாபனஞ் செய்தல் வேண்டும்; தீக்ஷோபனயன காலத்தினும் பஞ்சகலசத் தாபன மின்றிச் சோடச கர்மங்களில் யாதொன்றையுஞ் செய்வதில்லை. பஞ்ச கலசத் தாபன பூஜையின்றிச் செய்யப்படும் எவ்வித கருமமும் பரி பூரணமாவது மில்லை; பலனைத் தருவது மில்லை. இப்பஞ்சாசாரிய கலசத் தாபனஞ்செய்து அருச்சிப்பதனால் விசேஷ மகத்துவம் உண் டென்று வீரசைவ மதாசாரியர்கள் மேற்கொண் டிருத்தலினால் இலிங் காங்கியாகிய ஒவ்வொரு வீரசைவரும் எவ்வித கருமத்தைச் செய்யத் தொடங்கினும் இத்தாபன விதியை மிக ஊக்கத்துடனும் பேரன்புட னும் கைக்கொண்டு பூசிப்பதற்கு உரியவராகின்றனர்.

எந்தக் கருமம் விதியை யனுசரித்துச் செய்யப்படுகின்றதோ அந் தக் கருமம் உத்தமப் பலனைக் கொடுக்கின்றது. உயர்ந்த கருமமாயி னும் விதியைக் கடந்து மனம்போன போக்கில் செய்யப்படுமாயின் அது அதர்மப் பலனைக் கொடுக்கின்றது. யாதாயினும் ஓர் கருமம் விதியைக் கடந்து செய்யப்படுமாயின் அது நற்பலனைத் தராது ஒழி வதேயன்றிச் செய்தோருக்கும் செய்வித்தோருக்கும் தவிராது தீய பலனையுந் தந்துவிடும். உலகத்தில் மகன் தந்தையின் சொல்லுக்கு மாறுபடாது நடப்பானுயின் அத்தந்தை மகிழ்ச்சி யடைகின்றான்;

மாறுபட்டு நடப்பானாயின் அவனே அத்தந்தையின் கோபத்திற்குப் பாத்திர னாகின்றான். அதுபோல, பஞ்சகலசத் தாபன விதியைச் சிவாகமங்களில் போதித்திருக்கும் பரமேசுவரனுடைய வாக்கியங்களை அனுசரிப்பவர் எவரோ அவரே அப்பரமேசுவரனுடைய கருணைக்குப் பாத்திரராவர். அவ்வாகம வாக்கியத்தை யனுசரியாது குறைத்தோ மிகைப் படுத்தியோ நடத்துபவர் எவர் ஆயினும் அப்பரமேசுவர னுடைய கோபத்திற்குப் பாத்திரராவர் என்பதில் யாதும் ஐயமில்லை.

பஞ்சகலசத் தாபனம் என்பது யாது? அதனை என் வீரசைவர்கள் மட்டிலும் விவாக முதலிய சுபாசுப காரியங்களில் தவிராது செய்தல் வேண்டும்? என்பீரேல் சொல்லுதும்,—ஓர் காலத்தில் உண்மையான செம்மை மதத்தைத் தாபனஞ் செய்வதற்காகவாவது, சத்தினிபாதம்பெற்ற உத்தமச் சீடனுக்கு அருள்புரிந்து உபதேசிக்கவாவது நேருங்கால் சிவபெருமானே குருமூர்த்தமாக எழுந்தருளுவர் என்பது சிவாகமத் துணிபு. குருலிங்க சங்கமம் என்னும் முப்பகுதியும் சிவசொரூபம் என்பதும் இக்கருத்துப் பற்றியே. 'பரமேசுவரன் சத்தியோஜாதாதி பஞ்ச முகங்களை யுடையவராயிருந்து பஞ்ச கிருத்தியங்களைச் செய்கின்றார் என்றும், சத்தியோஜாதாதி பஞ்சமுகங்களினின்றும் அப்பரமேசுவர சொரூபமே ஸ்ரீரேவணாத்திரியர் முதலிய பஞ்சாசாரியர்களாக யுகங்கள் தோறும் அவதாரஞ்செய்து பஞ்சபீடங்களைத் தாபித்து வீரசைவ உத்தமோத்தம தருமத்தை நிலைநாட்டுகின்றனர்' எனவும் ஸ்வாயம்பு, சுப்பிரபோதம், வாதுளாந்தமான சிவாகமங்கள் இன்றும் முறையிடுகின்றன. அப்பீடங்கள் இன்றும் நின்று நிலவுகின்றன. ஆதலின், பரமேசுவரனே ஆசாரியர்களாக அவதரிக்கின்றனர் என்பதனாலும், ஆசாரிய பூசையே சிவபூசை யாதலினாலும், ஆசாரிய பூசையின்றிச் செய்யப்படும் எக்காரியமும் பலனைத் தாராதாதலினாலும், பண்டைக் காலந்தொட்டு வீரசைவர்கள் தமது வீரசைவமத தருமங்களைப் போதித்த ஆசாரியர்களை வழிபட்டு வரும் செய்ந்நன்றி மறவாத உத்தமர்களாய் இருந்துவருவதாலும் முக்கியமான காலங்களிலெல்லாம் விதிப்படியமைத்த கலசங்களில் ஸ்ரீபரசிவ சொரூபமான பஞ்சாசாரியர்களை வேத மந்திரத்தினால் ஆவாகனஞ் செய்து சோடசோபசாரத்துடன் பூசை செய்து ஆசாரிய கிருபையைப் பெற்று அந்த ஆசாரியருடைய சந்நிதானத்திலேயே அவரது

ஆணையை மேற்கொண்டே தமது கருமங்களைச் செய்து முழுப்பலனை யும் அடைவதாகக் கருதும் முழுநம்பிக்கை யுடையவராக இருக்கின் றனர் வீரசைவர். ஆதலினால், இதுவே பஞ்ச கலசத் தாபனம்; இதுவே வீரசைவ தருமம்.

இங்ஙனம் ஸ்ரீபஞ்சாசாரியர்கள் பஞ்ச கலசங்களில் மந்திரோச் சாரண மூலமாக சாக்ஷாத்கரித்து (எழுந்தருளி) கருமாதிகாரிக்கு அனுக்கிரகிப்பதா யிருக்க, இக்காலத்தில் இந்நாட்டில் சிலவிடங்களில் சுபசோபனாதி காரியங்களில் சிலர் விதிப்படிப் பஞ்சகலசத் தாபனஞ் செய்து பூசிக்காமலும், அதன் உண்மையை யறியாமலும் தமக்குத் தோன்றியவாறு செய்துவருகின்றனர். சிலர் உமாமகேசுவர கலசம், நவக்கிரக கலசம், தபன கலசம், புண்ணியாகவாசன கலசம் எனப் பல கலசங்களை வரிசையாக வைத்து வேதோக்த மந்திரமின்றி ஆடம் பர ஒலிகளின் இடையே தமது காரியத்தை முடித்து விடுகின்றனர். ஒருவர் செய்த முறையில் ஒருவர் செய்வதாகவும் காணப்படவில்லை, தாம் செய்யும் கிரியைகட்கும் பத்ததிகட்கும் காரணங் கூறுகின்றார் களுமில்லை. விவாகாதி காரியங்களில் செய்யும் எத்தனையோ ஆடம் பரங்களில் இதனையும் ஒன்றாகக் கருதுகின்றார்களே யொழிய இதனை வைதிகக் கிரியையாகிய சிறப்பு விதியென எண்ணுகின்றார்கள் இல்லை. வைதிக கிரியைகட்கு உபகரணமான பரம பவித்திரமான கலசத் தாபனங்களை வைத்துக்கொண்டே அவற்றின் இடையில் மரியாதை யின்றி லௌகிகக் கிரியைகளையும் நடத்துகின்றனர். இங்ஙனஞ் செய்வது பரிசீலனை யில்லாமையினாலேயோ? வசதி யில்லாமையி னாலேயோ? யாமறியேம். செய்துவைக்கும் ஆசாரியராக வருவோ ரும் தமக்கும் செய்துகொள்வோருக்கும் நன்மையுண்டாக வேண்டு மெனக் கருதித் தகுந்த பத்ததிகளை முன்னமே ஆராய்ந் தமைத்துக் கொண்டு ஓர் திட்டமான முறையில் பக்தி சிரத்தையுடன் செய்து வைக்கின்றார்களில்லை. கிரியாதரிசிகளும் ஆகாரம், சன்மான முதலிய வற்றில் கவலையுந் திரிபும் உடையவர்களாக இருக்கின்றனரே யன்றி இதிற் சிறிதும் கவனஞ் செலுத்துகின்றார்களில்லை. இன்னும் இதன் கொடுமை விரிக்கிற் பெருகும்.

விவாகாதி சுபகாரியங்களில் ஆசாரியத் தாபனஞ் செய்து அவ ரது அருளைப்பெற வேண்டுமென்றால் செய்துகொள்ளும் அதிகாரி

களும் (மணமக்கள் முதலியோரும்) செய்துவைக்க வரும் ஆசாரியர்களும் தூய்மை யுடையவராகவும், விரதம் உடையவராகவும் இருந்து தூய்மை யுடையதும், தூய்மைய ரல்லாதார் அணுகப் பெறுததுமான தக்கதோரிடத்தில் அமைக்கப் பெற்ற விதானத்தின்கண் விதிப்படி யமைத்த கலசங்களின் மந்திர பூருவகமாக ஆசாரிய மூர்த்திகளை ஆவாகனஞ் செய்து சோடசோபசாரங்களால் முறைப்படிப் பூசித்து அமைதியுற்ற மனதுடனிருந்து வேத ருக்கு முதலியவற்றால் தோத்திரஞ் செய்து ஆசாரியரது பூரண கிருபையைப் பெற்றுக்கொண்டு அவர்களிடத்தில் பாவனு ரூபமாக அனுக்ஞை பெற்றுக்கொண்டு, தாம் செய்யும் வைதிக லௌகிக கிரியைகளைச் செய்தல் வேண்டும். இங்ஙனம் செய்வோரே இல்லற வாழ்க்கையி லடையும் இன்பங்கள் அனைத்தையும் பெற்று மறுமை யின்பத்தையும் தவிராது அடைவர் என்பது திண்ணம்.

முறையாகக் கல்வி பயின்று உரியகாலத்தே தீக்ஷயாதி உபநயனங்களைப் பெற்று பிரமசரிய நிலையினின்ற ஆணும் பெண்ணுமாகிய இருவர்களே, மண மேடையி லமர்ந்து காநியாச முதலியவற்றைச் செய்துகொண்டு கலசங்களில் சானித்தியமாக விளங்கும் ஸ்ரீபஞ்சாசாரிய மூர்த்திகளை அருச்சித்து, அவரது அருளைப்பெற்று, மாகேசுவரர்களுடைய ஆசீர்வாதத்தால் பாணிக்கிரகணஞ் செய்துகொண்டு இல்லற வாழ்க்கையை யடைதற் குரியவர்கள். சிலர் தீக்ஷா சமஸ்காரத்தைப் பெறுத ஆணையும் பெண்ணையும் மணமேடையிலேற்றி ஆசாரிய பூசைசெய்யச் செய்கின்றனரே அது எங்ஙனம் பொருந்தும்? இஷ்டலிங்க பூசையைச் செய்ய உரியவ ரல்லாத மணமக்கள் இருவரும் ஆசாரிய பூசையைச் செய்ய உரியவராவரா? அவர் முன்னே ஆசாரியர்தாம் சானித்தியமாவாரா?

பௌரோகிதஞ் செய்பவரோ முறையாகக் கற்றவராயும், அருவருக்கத்தக்க அவயவக் குறைவில்லாதவராயும், பிரமசரிய நிலையைக் கடந்து கிரகஸ்த நிலையை யுடையவராயும், மனைவியோடு இருப்பவராயும், தோற்றம் உடையவராயும், வைதிக லௌகீகங்களிற் றவராது காலம் இடங்கட்கும் நிலைமைக்கும் ஏற்றவாறு குறித்த காலத்தில் மங்களகரமாக நடத்திவைக்கும் ஆற்றல் உடையவராயும், சமயாசாரமும் ஆசாரிய பக்தியும் உடையவராயும், அனுபவமுடைய தக்க வயது

உடையவராயும் இருத்தல் வேண்டும். இங்ஙன மிருப்பச் சிலர் மேற் கூறிய குணங்க ளனைத்துமின்றிக் குற்றங்களே நிரம்பப்பெற்ற அருக ரல்லாதவரை நட்புப்பற்றியோ உறவுபற்றியோ புரோகிதராக வரித் துக் கொள்கின்றனர்.

சமயாபிமான சீலர்களே! இதுவரையும் கூறியவாற்றால், வீர சைவர்கள் ஜாதகர்ம முதலிய சோடச கர்மாக்களிலும் பஞ்சாசாரிய கலசத்தாபன பூசைசெய்ய வேண்டுமென்பதும், அதுவும் வேதோக்த மாகச் செய்ய வேண்டுமென்பதும், செய்விப்போரும் செய்துகொள் வோரும் மதாசாரப்படி தீக்ஷையாதி சமஸ்காரங்களைப் பெற்றவரா யிருத்தல் வேண்டுமென்பதும், வைதிக கிரியைகளை மட்டிலும் ஆசார சீலர்களின் இடையிலமர்ந்து செய்ய வேண்டுமென்பதும், ஸ்ரீபஞ்சா சாரியர் கலசத் தாபனமின்றி வீரசைவர் எதுவும் செய்யலாகாதென்ப தும் பிறவும் அறியக் கிடக்கின்றமையால், இனி ஆங்காங்கு நடத்தும் விவாகாதி கருமங்களைச் செவ்வையாக நடத்திப் பரமேசுவர சொரூப மான ஆசாரிய கிருபைக்குப் பாத்திரராவார்களாக.

சிவானுபவம்.

ஸ்ரீமத் சச்சிதானந்த அன்னதான சுவாமிகள், ஆம்பூர்மடம்.

(முன் தொடர்ச்சி.)

இக்காலத்திய நவீன ரசாயன நூல் ஆராய்ச்சியாளர்கள் தம் முயற்சியினாலும், தாம் கண்ட கருவிகளினாலும் பிறர் எளிதிற் காண முடியாத நுண் பொருள்களைக் கண்டறிகின்றார்கள். நமக்கு முற் காலத்தே தோன்றிவந்த நம் நாட்டுப் பெரியோர்கள், இக்காலத்திய ரசாயன நூல் வல்லாரும் தமது கருவிகளைக் கொண்டு அறிதற்கரிய அதிசூக்குமமான நுண் பொருள்களையும் யாதொரு கருவியுமின்றித் தமது உயரிய ஆத்மசக்தி யொன்றினாலே மிகவெளிதில் கண்டறிந் திருந்தார்கள். ஈசுவரசக்தி அப்பெரியார்பால் மிகுதியாகப் பதிந்து இருந்தமையால் அவர்களால் அறிய முடியாத அரிய பொருள் ஒன்று மில்லை. இவற்றிற் கெல்லாம் அவர்களது மனத்தூய்மையே காரண மாம். அவர்களைப்போல் நம்மையும் மனத் தூய்மையராக்கிக் கொள் ளுதல் நம்மால் இயலாத காரியமாயிருக்கின்றது.

நமக்கு எப்பொழுதாயினும் இன்பம் உண்டாக வேண்டுமாயின் அது ஒருமித்த அந்தக்கரணத்தினாலேயே உண்டாக்கத் தக்கது; புத்தியினால் உண்டாகத் தக்கதன்று. மானிடவாழ்க்கையின் உண்மை நோக்கமாகிய சிவானுபவத்தை விசாரித்தறிதல் பெரும்பான்மையும் இக்காலத் தரிதாகின்றது. புத்தி விசாரத்திற்கு அப்பாற் சென்று அந்தக்கரணத்தின் உதவியினால் தன்னகத்தே தேடித்திரியும் ஒருவனுக்கே பரசிவ உண்மை விளங்குகின்றது. அவ்வாறின்றி ஒருவன் புத்தியைப் பின்பற்றி முக்தியையடைய விரும்புவானாயின் அதனிடையில் சற்று ஒழிவு ஏற்படத் தன்னோக்கத்தையும் தளரவிடுத்துத் தன் வாழ்க்கையைக் கருதியே பரோபகாரத்தின் பொருட்டு உழைப்பதாகக் காட்டிக்கொண்டு போதிக்கத் தொடங்கி விடுவன். அவ்வளவிலேயே அவனது புகழ் எங்கும் பரவ, ஆ! ஆ! இவரிதயம் கல்விக் களஞ்சியம் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை, என்று அவனைப் பலரும் புகழ்ந்து கொண்டாடத் தொடங்குவர். அதனாற்றான் ஆதி சங்கரரும், "வாக்வைகரி சப்தஜரி ச்ரஸ்திர வாக்யான கௌசலம், வைதுஷ்யா விதுஷாந்த தத்புத்தியேநது முக்தயே" என்று கூறியிருக்கின்றனர். அதனால் இத்தகையோரது வாக்கு வன்மை யெல்லாம் வயிற்றுப் பிழைப்பின் பொருட்டோடு நின்று விடுகின்றதே யன்றி உயரிய வீட்டு நெறிக்குச் சிறிதும் உதவுவனவாயில்லை.

ஒளிபொருந்திய பகற்காலத்திற் சூரியனைக் காட்டத் தீவர்த்தியொன்று வேண்டுவது இல்லையே? ஓர் விரலினாற் சுட்டிக்காட்டுதலொன்றே அதற்குப் போதுமானதல்லவா? அதுபோல, கோடி சூரியப் பிரகாசத்தினோடு எங்கும் நிறைந்து விளங்குகின்ற எம்பெருமானைக் காண, புகழ், பெருமை, செல்வம், கல்வியாதி இவைகள் தேவையில்லை. ஆனால் தூய்மை, அன்பு, இரக்கம், பொறுமை, சாந்தம் முதலிய சத்துவ குணங்களைக் கைக்கொண்டவர் ஈசனை எளிதிற் சென்றடைவர். 'யதோவாசோ நிவாதந்தே அப்ராப்ய மனசா சஹா" என்று சுருதியும் முறையிடுகின்றது. கடவுள் இந்திரியங்கட்கெல்லாம் அப்பாற்பட்டவராயும், மனத்தாற் பற்றப்படாதவராயும் இருத்தலினால், மனத்தையுங் கடந்து மனோமய கோசத்தையுந் தாண்டி அப்பாற் சென்று அப்பெருமானைத் தரிசிக்கவேண்டும்.

நாம் இதுவரை எண்ணிறந்த பிறவிகளை எடுத்துள்ளோம். அப்பிறவிகள்தோறும் புரிந்த இருவினைகள் நம்மைவிடாது சூழ்ந்துநின்று அதிநுட்பமாகக் காணத்தக்க எம்பெருமானைக் காணவொட்டாமற் றடுக்கின்றன. ஆதலினால், நாம் இதுவரையுஞ்செய்த ஆராய்ச்சியாற் கிடைத்த உண்மைகளை உள்ளத்திற் பதித்து நமது வாணாளில் ஒவ்வொரு நிமிடமும் அதைப்பற்றிச் சிந்தித்து அனுபவத்திற் கொண்டு வருவோமானால் அவ்வினைக ளனைத்தும் சூரியனைக் கண்ட பனிபோல் மறைந் தொழிந்து போகுமல்லவா? அப்படி ஒழிந்து போகவே ஜாக்ரம், சொற்பனம், சுழுத்தியாகிய மூன்றவத்தையினும் கண்டிராத ஓர் மேலான நிலையை யடைவோம். அப்பொழுது நமது உடைநடை பாவனை யனைத்தும் வேறுபட நமது நோக்கமே வேறாய்விடும். அப்பொழுது இந்த நிலையை யடைந்த ஒருவன் உத்தமன்போற் காணப் படுவன். ஈசன்பால் ஆறாத அன்புடைய இத்தகைய புண்ணியன் உலகப்பற்றுடைய சீவர்களுக்கு உன்மத்தனாகத்தானே தோற்றுவன்! அங்ஙனந் தோற்றினும் ஈசர்க்கு மீளாவாளாய அவ்வன்பர்க்கு ஆவதொன்று மில்லை, அழிவதொன்று மில்லையே?

ஆதலால், அன்பர்களே! இச்சிறு மொழியினை மனதிடைக் கொண்டு நீங்கள் நினைக்கும் ஒவ்வொரு எண்ணமும், நீங்கள் புரியும் ஒவ்வொரு செய்கையும் சிவத்தின் பாலதாகவே இருக்கவிட்டு. காமம், குரோதம், லோபம், மதம், மச்சரம் முதலான கொடிய குணங்கள் நிறைந்து கிடக்கும் குடிலாகிய இவ்வுடலி னின்றும் அவற்றை வெளியேறப்போக்கி, அன்பு, தயை, பொறுமை, பக்தி முதலிய நற்குணங்களால் நிறைவுற்று நறுமணம் வீசச் செய்து இச்சிறு பாழ்க்குடிலை உயரிய ஓராலயமாக்கி அதன்கண் நமது ஒளிவடிவாகிய ஈசனை எழுந்தருளச்செய்து அப்பெருமான்பால் சிவானுபவத்தைப் பெற்று உண்ணுந்தோறுந் தெவிட்டாத அச்சிவசாம்பிராஜ்யமாகிய மதுரம்பொருந்திய நற்கனியையுண்டு என்றும் பிறப்பிறப்பில்லாது நித்திய சுகபோக பேரின்ப வாழ்க்கையிற் களித்திருக்க முயற்சிப்பீர்களாக. இத்தகைய நித்திய சுகானுபவங் கைவரப்பெற்ற பெரியோரே தாம் அனுபவிக்கும் இன்பம் அடங்காது ததும்பி நிற்கும் நிலையில் "கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியே! கரையிலாக் கருணைமா கடலே!" என உலகானுபவமுடைய நாம் அனுபவிக்கும் உலகவின்பத்தினும் மேலான

இன்பமும், அதற்குரிய வழியும் உண்டென உணரவேண்டித் தம் பெருங் கருணையால் மொழிந் தருள்வாராயினர்.

இத்தகைய அனுபவமுடையார் வாக்கினையும் அவருடைய செயல்களையும் அவர்களுடைய சரித்திர வாயிலாகவும் நூல் வாயிலாகவும் நண்குணர்ந்த ஆசிரியர்கள்பால் நன்குணர்ந்து உணர்ந்த மட்டிலும் நின்றுவிடாது அவர் கைக்கொண்ட முறையைக் கைக்கொண்டு அதிற் றவறுத விரதமும் வைராக்கியமும் உடையராயிருந்து நாள்தோறும் பழகிவருவோமாயின் நமக்கு அச்சிவானுபவம் கைகூடு மென்பதிலும், எல்லாம் வல்ல அவ்விறைவன் நம்முள் நின்று நமக்குத் துணையாய் இன்னருள் புரிவன் என்பதிலும் சிறிதும் ஐயமின்று. அங்ஙனமே அவனருள் பெறுவோமாக! சுபம்.

"பவி பீஜ ததா பக்த, பக்தி பீஜ ததா சிவ,
சிவ பீஜ ததா ஞானம், ஞானம் திரி லோக்ய துர்லபம்"
சிவோஹம்; சிவோஹம்; சோஹம்; சோஹம்.

ஆங்கில பாஷையின் பிரபாவமும் குருபக்தியின் இலக்கணமும்.

ஆஸ்தான வித்துவான்,
சிரசி. குருசாந்த சாஸ்திரிகள், மைசூர்.

ஸ்ரீபரமேசுவரன் மனிதர்களின் முன்னேற்றத்திற்காகத் தானே குருரூபத்தைத் தாங்கிப் பூவுலகில் சஞ்சரிக்கின்றான் என்று மணியோசைபோல எடுத்துரைக்கின்ற சிவாகமங்களின் சித்தாந்தம் ஒவ்வொரு ஆஸ்திகருக்கும் தெரிய வேண்டிய தன்மையை யுடையது. ஆதலினாலே உலகத்தில் "குரு" என்ற பொருள் சிறப்பாகப் போற்றத் தகுந்த நிலையை யடைந்து விளங்குகின்றது. சநாதன தருமத்தை மேற்கொண்டிருக்கும் பாரத நாட்டினர் தேவர்களைவிட குருவினிடத்தில் சிறந்த பக்தியைவைத்து நடந்துகொள்ளுந் தன்மை சிறிய பாலர்களுக்கும் தெரிய வருகின்றது. இவர்கள் தத்தம் குருமார்களின்

சம்மந்தமாகப் பிராணனையுங் கூட ஒப்புவித்திருக்கின்றார்கள். எத்துணையோ இடத்திலுள்ளவர்கள் தத்தம் ஆசாரியரின் திருவிழாச் சம்மந்தமாக இலக்ஷக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்திருக்கிறதேயன்றி ஒவ்வொரு சமயத்தில் பிராணனையுங்கூடக் கொடுத்திருக்கின்றார்கள். இவர்களே உண்மையான குருபக்தி யுடையவரென்று கை தூக்கிக் கூறவேண்டி யிருக்கின்றது. பூருவ காலத்திலிருந்த இத்தகைய குருபக்தியானது நிகழுங் கலிமகிமையினால் குறைந்துவரும் நிலைமையை நோக்கி ஆஸ்திக மக்கள் நடுங்குகின்றனர். ஆனால் இப்படிப்பட்ட காலம் பலநாள் வரையும் நில்லாதென்று ஐயமறக் கூறுதல் வேண்டும்.

இற்றைக்கு 2500 வருடங்கட்கு முன்னரிருந்த அசோகச் சக்கிரவர்த்தியின் காலத்தில் இப்படியே பரதக் கண்டமானது நாஸ்திகமயமாகப் போயிருந்தது. எங்கே நோக்கினும் கடவுள் இல்லை; கடவுள் இல்லை; இன்பமே சுவர்க்கம்: துன்பமே நரகம்; என்ற நாஸ்திக வாதமே தலையெடுத்து உலாவிவந்தது. அப்பொழுது சில மகான்கள் அவதாரஞ்செய்து சில வருடங்களில் நாஸ்திக வாதத்தை யெல்லாம் நாசஞ்செய்து பரதக் கண்டத்தில் பௌத்த மதத்தின் வேரையே அறவே களைந்து இந்தக் கண்டத்தை முன்னிருந்தபடியே ஆஸ்திக மயமாகச்செய்து சனாதன தருமத்தை நிலைநாட்டினர். அதுபோலவே இப்பொழுதிருக்கும் குருபக்தியின் குறைந்த நிலைமையும் ஒருகாலத்தில் மகாத்மாக்களினால் அழிவுபட்டொழிய முன்னிருந்தபடியே ஒரே முகமாகக் குருபத்தியானது விளங்கு மென்பதில் சிறிதும் ஐயமில்லை.

இக்காலத்தின் குருபக்தியின் அழிவுபாட்டிற்கு ஆங்கில பாஷையின் போதனையே மூலகாரணமென்று கூறுதல் வேண்டும். இந்த ஆங்கில போதனையினால் குருபக்தி மாத்திரமன்று, மாதா பக்தியும், பிதா பக்தியும், கடவுள் பக்தியும் குறைந்து போயின. எதிரில் நான்கு இங்கிலீஷ் எழுத்துக்களைக் கூறினாற்போதும். அவனிடத்தில் கூடவே நாஸ்திக வாதம் தலையெடுக்கத் தொடங்கி விடுகின்றது. அதனால் என்ன? இதனால் எனன? அதனிடத்து என்ன விருக்கின்றது? எல்லாம் ஒன்றே! குருவெங்கே? சிஷ்யனெங்கே? கடவுளெங்கே? என்று கட்குடித்து மயங்கினவனைப் போலப் பேசத் தொடங்கி விடுகின்றனர். இந்த ஆரிய தருமத் துரோகிகளுக்கே நரகமன்றி வேறு

ஒருவருக்கு இல்லையென்று கூறுதல் வேண்டும். இவரது தாய் தந்தை கள் முதிர்ந்த பருவத்தினல் குரூபிகளா யிருந்தால் இவர் எமது தாய் தந்தையரல்லர் ; எமது வீட்டில் காத்துக்கொண்டு இருக்கும் ஏழை மக்களென்று கூறுதல் பொய்யானதன்று. இப்படிப்பட்ட பாபிகள் ஆங்காங்கே காணப்படுகின்றனர். இப்படிப்பட்ட நீசர்களைப் பல பீஜ சம்பந்திகளென்று கூறினும் அதனல் தோஷம்வராது. தம்மை எடுத்து எண்ணெய் வெந்நீர்களால் காப்பாற்றிய தாய் தந்தையர் களையே இவ்வாறு ஒதுக்கிவிடக் காணுகின்ற குண்டகர்கள் குருவை பக்தியுடன் காணவில்லையெனக் கூறுதல் வேண்டா. சிலர் தமது இல்லத்திற்கு ஆசாரியர்கள் வருவரேல் அவரை வெருட்டுவதற்கே துணிகின்றனர். அவர்களைப் போற்றும் முறையில் வரவேற்காது தூரகங்காரத்தினல் வரவேற்கின்றனர். இவ்விதமாகச் செய்கின்றவர் களுள் ஆங்கிலம் படித்த சில நாஸ்திகர்களும் சில பணக்காரர்களும் பெரும்பான்மைய ராகின்றனர். இவர்கட்குக் கடவுள் இவர்களது வாழ்நாளிலேயே தண்டனையைத் தருகின்றனர். இதனல் ஆசாரியர் களிடத்தில் சிஷ்யர்க்கு நிரம்பிய பக்தி யிருக்க வேண்டுமென்பது கூறப்படுகின்றது.

"குரு : சிவோ குருர் மந்திரோ குருர் மாதா குரு : பிதா" என் னுந் தரும சாஸ்திரத்தின்படி குருவே சிவனென்றும், மந்திரமென் றும், தாயென்றும், தந்தை யென்றும் பாவித்து நடத்தல் வேண்டும்.

"தியானமூலம் குருமூர்த்தி : பூஜாமூலம் குரு : பதம்,
குருவாக்கியம் முக்திமூலம் குரு, க்ருபா" என்று குருவின் ஆதிக்கியத்தைக் கூறும் குருகீதையின் போதனையை ஒவ்வொருவரும் சிந்தித்துப் போற்றுதல் வேண்டும்.

"ய : பஸ்யதி குரும் சிஷ்ய உதாசீன மநீஷயா,
சபாபாத்மா மகாகோரே நரகே பரிவர்த்ததே :". எந்த சிஷ் யன் குருவை உதாசீன புத்தியினற் காணுகின்றானே அவன் மகா பாபியெனறும், கோரமான நரகத்தை யடைவானென்றும் தருமசாஸ் திரம் முறையிடுகின்றது. இதனை ஒவ்வொருவரும் தெரிந்துகொண்டு குருவினிடத்தில் பக்தி செலுத்தல் வேண்டும். இக்காலத்தில் சில இலிங்கதாரிகள் அநாதி சம்சித்த சம்பிரதாய சுத்தராகிய வம்சத்திற்

ரேன்றிய குருக்களை விடுத்து ஒக்கலியராயினும் சரி, ஜாடனாயினுஞ் சரி, பணஜிகனாயினும் சரி தத்தம் பங்கடங்களில் குருக்களை ஏற்படுத்திக் கொள்கின்றனர். இந்த நவீன சாஸ்திரியர்களுக்கு யாது கூறினும் பயனில்லை. ஜங்கமர்களுக்கும் நமக்கும் யாது வேறுபாடு? அவரிடத்துள்ள உறுப்புக்களே நம்மிடத்தும் உள்ளன. அப்படியிருக்க, அவர்க்கும் நமக்கும் யாது வேறுபாடு? என்று வாதாடுகின்றனர். இப்படிப்பட்டவர்களுக்கு அவையவங்க ளனைத்தாலும் ஒற்றுமையாக காணப்படுகின்ற தாயும் தமக்கையும், மனைவியும் ஒன்றே. இவ்வேறுபாட்டையாவது தெரிந்துகொண்டு பூருவாசாரியர்களிடத்தில் பக்தியுடனிருக்க வேண்டுமெனப் பரமேசுவரனைப் பிரார்த்திக்கின்றேன்.

காட்டக்கோட்டையர் புராணம்.

நீர்வளம் நிலவளங்களாற் சிறந்தது கர்நாடக தேயம். அத்தேயத்தின்கண் பசவேசர் போன்ற அறிவிற் சிறந்த பெரியார் தங்குவதால் என்றும் மங்களகரமாய் விளங்குவது கல்யாணபுரம். அக்கல்யாண புரத்தின்கண் ஆயர் குலத்திலே அக்குலத்தாரும் பிறருஞ் செய்த தவப்பயனாகக் காட்டக்கோட்டையர் என்னும் பெரியார் அவதாரஞ் செய்தனர்.

இவர் இளமைப் பருவத்தினராயினும் இயற்கையாகவே ஒழுக்கத்தினும் சிவநேயத்தினும் யாவரினுஞ் சிறந்தவராக விளங்கினர். இவர் தாம் பிறந்த ஆயர்குலத் தருமப்படி நாள்தோறும் ஆடுகளையும் பசுக்களையும் திரளாக ஓட்டிக்கொண்டு போய்ப் புல் நிறைந்த புலங்களில் மேயவிடுத்து வயிறார மேய்ந்த பின்னர் ஓடை முதலிய நீர்நிலைகளில் நிறைந்துள்ள நீரை யருந்தச்செய்து மாலைப்பொழுதில் தொழுக்கூட்டத்திற் கொண்டுவந்து சேர்ப்பிப்பர். இச்சிறுவர்க்குப் பண்டைய நல்வினைப் பயனால் சிறிது காலத்திலேயே சிவபுண்ணியஞ் செய்தலாகிய நல்லெண்ணந் தானாகவே தோன்றுவதாயிற்று.

அவ்வெண்ணந் தோன்றவே ஆடுகளையும் பசுக்களையும் தொழுக்கூடத்தினின்றும் வெளியேற்றி அவை வருந்தா வண்ணம் புல் நிலங்க

ளில் ஓட்டிவிடுவர். வயிறார மேய்ந்த பின்னர் நீரருந்தச் செய்வர். நீரருந்திய பின்னர் தழைத்து வளர்ந்த மரநிழலின்கண் மந்தையாக மடக்கி இளைப்பாறச் செய்வர். இளைப்பாறிக் கொண்டு இருக்கும் பொழுது நித்திய கடன்களை முடித்துக்கொண்டு பழுதுபடாத ஆட்டின் சாணங்களை ஏந்திக்கொண்டுவந்து அவற்றைக்குவித்து வேதிகையாக்குவர். அவ்வேதிகையின் மேல் சிவலிங்கத்தைத் தாபிப்பர். பசுவின் பாலைக் கறந்துவந்து பல குடங்களில் நிரப்பி வைப்பர். அக்காட்டகத்தே யுள்ள நறுமணமுள்ள மலர்களை யெல்லாம் பரித்துப் பலாசிலையால் தைத்த கல்லைகளில் நிறைத்து வைப்பர். ஆடு மேய்க்குஞ் சிறுவர்களை அருகே அமைதியாக அமரச் செய்வர். குடங்களில் நிறைத்து வைத்துள்ள பாலனைத்தையும் சிவலிங்கப் பெருமானுக்கு அபிடேகஞ் செய்வர். அம்மலர்களை யெல்லாம் அப்பெருமானது திருமுடியின்மேல் அழகு பெறச் சாத்துவர். மரங்களிற் பழுத்துள்ள பழங்களைக் கொண்டுவந்து நிவேதனஞ் செய்வர். செய்த பின்னர் புல்லாங்குழலை யெடுத்துத் தமது வாயில் வைத்து உலகத்திலுள்ள சராசரங்கள் அனைத்தும் உருகி நிற்கும்படிப் பேரன்புடன் பலகால் ஊதித்துதிப்பர். சிவானந்த மேலீட்டால் கூத்தாடி மனமுருகி நின்று கண்ணீர்வார மெய்ம்மயிர் பொடிப்பத் தம் வசம் இழந்து நிற்பர். நின்று எனது அம்மையே! அப்பா! ஒப்பிலாமணியே! அன்பினில் விளைந்த ஆரமுதே! நாயினேனைப் பிறவிக் கடலினின்றும் எடுத்து ஆணவமலத்தைப் போக்கி உமது திருவடி நீழலை யடையச் செய்த பெருங்கருணைக்கடலே! இனியுன்னையொழிய ஒருவரையும் எண்ணுகிலேன். இனி என்னையும் என்னைச் சார்ந்தோரையும் காத்தருள்க? என்னுங் குறிப்பாற் பலகாற் பணிந்து எழுந்து பூசையை முடித்துக் கொண்டு கால்நடைகளை ஓட்டிவந்து தொழுக்கூட்டத்திற் சேர்ப்பித்துச் சிவானுபவ முடையராக விளங்கினர். இவ்வாறு பல நாட்கள் சென்றன.

செல்லவே, பசுவின் பால் நாளடைவில் அளவிற் குறைந்து வந்தது. அதனைப் பலரும் அறிவிக்க அச்சிறுவரது தந்தையார் அறியலாயினர். அறிந்த தந்தையார் ஓர்நாள் தமது புதல்வனுடைய களவினைக் காணவேண்டி அச்சிறுவர் அறியாதபடி அக்காட்டகத்தே மறைந்து நின்று நோக்கினர். அச்சிறுவரும் வழக்கம்போல, சிவ

பூசையை முடித்துநின்று துதித்துக்கொண்டு தம்மை மறந்துநின்றனர். அச்சிறுவர் பாடும் பில்லாங்குழல் ஓசையைக் கேட்டு ஓரறிவுயிராகிய தாவரங்களும், ஐயறிவுயிராகிய பசுக்களும் அசைவற்று நின்றனவென்றால், ஆறறிவுடைய மக்களது நிலையைப் பேசவும் வேண்டுமோ? அதனைக் காணவே அவரது தந்தையார்க்கு மட்டிலும் கடுங்கோபம் உண்டாயிற்று. உண்டாகவே விரைந்து சென்று அச்சிவலிங்கப் பெருமானைக் காலால் இடறி வீழ்த்தினர். அதனைக் கண்டார் நமது அன்பராகிய ஆயர்குலச் சிறுவர். அந்தோ யாது செய்வர்! பெருமானைக் காலால் இடறிய பாதகர் தந்தையென்றும் பாராது அங்கு அருகே கிடந்த கோடரியை யெடுத்து அதனால் அவரது தலையைக் கொய்து வீழ்த்தினர்.

வீழ்த்தவே, தேவர்கள் பூமாரி பொழிந்தனர். வானத்தின்கண் துந்துபி முழங்கின. சிவபெருமான் உமாதேவியார் இடப்பாகத்தே வீற்றிருக்க இடையில் ஆறுமுகப் பெருமான் பொலிந்து விளங்கத் தோன்றும் சோமாஸ்கந்த மூர்த்தியாக இடப வாகனத்தின்கண்ணே யெழுந்தருளிக் காட்சி தந்தனர். தலை துணிக்கப்பட்டு இறந்து கிடந்த தந்தையாரும் உயிர்பெற்றெழுந்தனர். தந்தையைத் தடிந்த வீரராகிய காட்டக்கோட்டையர் என்னும் அச்சிறுவரும் இடபவாகனத்தே தோன்றும் அம்மையப்பரைக் கண்டு தரிசித்து அளவிலாத ஆனந்தங்கொண்டு தமது புல்லாங்குழலில் ஸ்ரீபஞ்சாக்ஷர மந்திரத்தை யமைத்துச் சப்தசுரங்களும் தாமாகவே வந்தமையப்பாடி யாவரையும் மகிழ்வித்துத் தம் வயமிழந்து நின்றனர். அங்கிருந்த கணநாதர்கள் அனைவரும் இச்சிறுவரது கையில் வந்த கோடரி முக்கணன் பரசோ? அல்லது வேழமுகன் பரசுதானோ? மேலான பதத்தை நல்கும் வீரமிக்க அருட்பரசோ? சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் கைலாயத்தின் வாயிற் கதவினைத் திறக்கும் திறவுகோலோ! பவப்பிணியுறாத சிவத்துரோகரது சிரத்தைத் துணிக்கும் கூரிய வாளோ! பவப்பிணி தொலைக்கும் பரம அவிழ்தமோ! என்று புகழ்ந்து துதித்தனர். ஆட்டுச் சாணத்தால் அமைக்கப்பெற்ற வேதிகையே சிற்பநூற்படி யியற்றிய சிவாலயமாக விளங்கிற்று. யாவரும் கண்டு தரிசித்தனர். சிவபெருமான் ஐயரை நோக்கி அன்பனே! இன்னுஞ் சிலநாள் இவ்வுலகத்திற்றங்கி சிவபக்தியை எங்கும் நிலைபெறச் செய்து முடிவில்

நமது பதத்தை அடைவாயாக! என்றருள் செய்து மறையலாயினர். காட்டக்கோட்டையரும் ஆணைப்படியே கற்புடைச் சமயமாகிய வீர சைவ சமயத்தை எங்கும் நிலைபெறச் செய்து சின்னாளில் தந்தையா ருடன்சிவபதமடைந்தனர். (தொடரும்).

திருமுருகாற்றுப்படை.

உ. திருச்சீரலைவாய்.

(முன் தொடர்ச்சி.)

கூக. மாயிருண் ஞால மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன் றொருமுக மொருமுகம்
ஆர்வல ரேத்த வமர்ந்தினி தொழுகிக்
காதலி னுவந்து வரங்கொடுத் தன்றே யொருமுகம்

கூரு. மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வியோர்க் கும்மே யொருமுகம்
எஞ்சிய பொருள்களை யேமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே யொருமுகம்

செறுநாத் தேய்த்துச் செல்சம முருக்கிக்
கoo. கறுவுகொ ணெஞ்சமொடு களம்வேட் டன்றே யொருமுகம்
குறவர் மடமகள் கொடிபோ னுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே யாங்கம்

கoரு. மூவிரு முகனு முறைநவின் றொழுகலின்

பதவுரை.—(முருகப் பெருமானது ஆறு முகங்களிலே) ஒரு முகம் – ஓர்முகம், மா இருள் ஞாலம் – பெருமையையும் இருட்சியை யும் உடைத்தாகிய உலகம், மறு இன்றி – குற்ற மின்றாய், விளங்க – விளங்கும்படி, பல் கதிர் – பல கிரணங்களையும், விரிந்தன்று தோற்று வித்தது; ஒருமுகம் – ஓர்முகம், ஆர்வலர் ஏத்த – தன்மேல் அன்பு

செய்தவடியார்கள் துதிக்க, அமர்ந்து — அதற்குப் பொருந்தி, இனிது ஒழுகி — அவர்க் கினிதாக நடந்து, காதலின் — (அவர்மேற் சென்ற) காதலாலே, உவந்து — மகிழ்ந்து, வரம் கொடுத்தன்று — வேண்டும் பொருள்களை முடித்துக் கொடுத்தது; ஒருமுகம், மந்திர விதியின் — மந்திரத்தையுடைய வேதத்திற் கூறிய, மரபுஉளி — முறைமையிடத்து, வழாஅ — தப்பாத, அந்தணர் வேள்வி — அந்தணருடைய யாகங்களில், ஓர்க்கும் — (தீங்கு வராதபடி) நினையா நிற்கும்; ஒருமுகம், எஞ்சிய பொருள்களை — இவ்வுலகத்தில் வழங்காத வேதங்களினும் நூல்களினு முள்ள பொருள்களை, நாடி — ஆராய்ந்து, ஏம் உற — இருடிகள் இரட் சையை யடையும்படி உணர்த்தி, திங்கள்போல — கலைநிறைந்த சந்தி ரனைப் போல், திசை விளக்கும் — திசைகளெல்லாம் விளங்கும்படிச் செய்யும்; ஒருமுகம், செல் சமம் — (திருவுள்ளத்துச்) செல்கின்ற நடுநிலைமையை, முருக்கி — கெடுத்து, கறுவு கொள் நெஞ்சமொடு — (இவர்களைக் கொல்ல வேண்டுமென்று) கறுவுதல் கொண்ட திருவுள் ளத்தோடே, செறுநர்த் தேய்த்து — கோபித்தற் குரிய அசுரர் முதலி யோரை அழியும்படிக் கெடுத்து, களம் — கள வேள்வியை, வேட் டன்று விரும்பியது; ஒருமுகம், குறவர் மடமகள் — குறவருடைய இளமையை யுடைய மகளாகிய, கொடி போல் நுசுப்பின் — கொடி போன்ற இடையினை யுடைய, வள்ளியொடு — வள்ளி நாயகியாருடன் நகை அமர்ந்தன்று — மகிழ்ச்சியைப் பொருந்தியது.

பொழிப்புரை.—முருகப் பெருமானது ஆறுமுகங்களிலே ஒரு முகம், பெருமையையும் இருட்சியையும் உடைத்தாகிய உலகம் குற்ற மின்றாய் விளங்கும்படிட் பல கிரணங்களையும் தோற்றுவித்தது; ஒரு முகம், தன்மேல் அன்புசெய்த அடியார் துதிக்க அதற்குப் பொருந்தி அவர்க் கினிதாக நடந்து அவர்மேற் சென்ற காதலாலே மகிழ்ந்து வேண்டும் பொருள்களை முடித்துக் கொடுத்தது; ஒருமுகம், மந் திரத்தையுடைய வேதத்திற் கூறிய முறைமை யிடத்துத் தப்பாத அந்தணருடைய யாகங்களில் தீங்கு வராதபடி நினையா நிற்கும்; ஒரு முகம், இவ்வுலகத்தில் வழங்காத வேதத்தினும் நூல்களினுமுள்ள பொருள்களை ஆராய்ந்து இருடிகள் இரட்சை யடையும்படி உணர்த் திக் கலைநிறைந்த சந்திரனைப்போல் திசைகளெல்லாம் விளங்கும்படிச் செய்யும்; ஒருமுகம், திருவுள்ளத்துச் செல்கின்ற நடுநிலைமையைக்

கெடுத்து இவர்களைக் கொல்ல வேண்டுமென்று கறுவுதல் கொண்ட திருவுள்ளத்தோடே கோபித்தற்குரிய அசுரர் முதலியோரை அழியும்படிக் கெடுத்துக் கள வேள்வியை விரும்பிச் செய்தது; ஒருமுகம், குறவாது இளமையையுடைய மகளாகிய கொடிபோன்ற இடையினையுடைய வள்ளி நாயகியாருடன் மகிழ்ச்சியைப் பொருந்தியது.

விரிவுரை.—அந்தணர் – அந்தத்தை அணவுவார். என்றது – வேதாந்தத்தையே நோக்குவார் என்றவாறு. அந்தம் – வேதத்தின் முடிவு. அணவுதல் – நோக்குதல். இனி அந்தணர் – அறம்புரிவோர் எனக் கூறினும் பொருந்தும். என்னை? தம்மை யொழிந்த பிற வுயிர்க ளிடத்தெல்லாம் செம்மையாகிய கருணையினாற் செய்யப்பெறும் அறத்தை யுடையோர் என்றபடி,

"அந்தண ரென்போ ரறவோர் மற்றெவ் வுயிர்க்குஞ்
செந் தண்மை பூண்டொ ழுகலான்." என்பது திருக்குறளாசிரியர் கருத்து.

ஏமம் – இரட்சை. அதாவது காவல். ஏம் எனக் கடை குறைந்தது.

சமம் – நடுநிலைமை. அதனைக் கெடுத்தலாவது – தேவரையும் அசுரரையும் ஒப்பக் கருதாது தேவரைக் காத்து அசுரரை யழித்தல்.

'மடவரல் நகை, எனக் கூட்டித் தனக்கு ஓரறியாமை தோன்றுந் தன்மை யுடைத்தாகிய நகை என்று கூறுக. அவளொடு நகை யமர்தலின் அறியாமை கூறினர். காம நுகர்ச்சி யில்லாத இறைவன் இங்ஙனம் நகை யமர்ந்தான்; உலகில் இல்வாழ்க்கை நடத்தற்கென்றுணர்க. அது "தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்" என்பதனுள், "பெண்பா லுகந்திலனேற் பேதாயிரு நிலத்தோர்—விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ" என்பதனை யுணர்க என்றார் நச்சினார்க்கினியர்.

விரிந்தன்று, கொடுத்தன்று, வேட்டன்று, நகை யமர்ந்தன்று, ஓர்க்கும், விளங்கும் என்பன முற்றுச் சொற்கள்.

இதனால் முருகப் பெருமானுடைய திருமுகங்களாறன் செய்கை கூறப்பட்டது. தியானிப்போர்க்கு இவ்வுணர்ச்சி இன்றியமையாதது.

சென்னலசும் வீரசைவரும்.

(ஜ ன ச ங் கி யை)

பஞ்சாசாரியப் பிரபா பத்திராசிரியர்.

பாரதநாடு முதலிய எல்லா நாடுகளிலும் பத்து வருடங்கட்கொருமுறை அரசாங்கத்தார் ஜனசங்கியை எடுத்து வருகின்றனரே! இந்தக் கணக்கில் இலிங்கதாரிகள் மதம், சாதி, தொழில் முதலியவற்றை எந்த முறையில் எழுதிவைக்க வேண்டும் என்று நம்மை எழுதிக் கேட்கின்றனர். ஆதலினால் இந்தக் கட்டுரையை யெழுதி யாவருமறிய வெளியிடலாயினோம்.

இவ்விஷயத்தில் ஆங்காங்குள்ள சில பசவந்திரிகள், இலிங்கதாரிகள் தத்தமது பங்கடத்தை (சாதியின்) பெயரைச் சொல்லாமல் கேவலம் 'இலிங்காயதர்' என்னும் மதத்தின் பெயரை மாத்திரம் சொல்ல வேண்டுமென்று போதிக்கின்றனர். ஆனால் இலிங்காயதர் (பசவந்திகள்) அப்படிக் கூறினால் கூறட்டும். ஏனென்றால் அக்கொள்கையின் உண்மை சாதி தத்துவங்களை அழிப்பதாகத் தெரிகின்றது. ஆதலின் அங்ஙனம் கூறிக்கொள்வது அவருக்கே பிரகாசமாய் இருக்கட்டும். மதத் தாபனாசாரியருடைய சித்தாந்தத்தை அங்கீகரிக்கும் வீரசைவர்கள் மாத்திரம் அந்தச் சாதியைக் கெடுக்கும் வழிக்குச் செல்லலாகாது. ஒவ்வொருவரும் அநாதிகாலமாக வழங்கிவரும் தத்தமது சாதியின் பெயரை விருப்பத்துடன்கூறி சாதிதர்மா வலம்பிகளென்னும் பிருதை அடைதல் வேண்டும். சாதி மரியாதை சிவபெருமானாலேயே தாபிக்கப்பட்டது. இவ்விஷயத்தை வீரசைவ தரும சிரோமணி நூலாசிரியரான கௌதிராஜ்யத்தின் ஷடக்ஷர மந்திரிகன் தமது நூலில்,

"சிவோக்தரம் ஜாதி மர்யாதாம் யோதீத்ய புவிவர்த்ததே,
ஸசண்டாள இதிஜ்ஞேய : சர்வ கர்ம பகிஷ்கிருத :

என்னும் சிவாகமப் பிரமாணத்தை உதாகரித்து எந்த வீரசைவன் சிவபெருமானால் தாபிக்கப்பட்ட சாதி மரியாதையைக் கடக்கின்றானோ அவன் சண்டாளன் என்றும், கருமவிரோதி யென்றும் கண்டாகோஷமாகக் கூறியிருக்கின்றனர். ஆதலினால், ஒவ்வொருவரும் இந்தச்

சிவாகம வாக்கியத்தை யனுசரித்து அதன்படி நடத்தல் வேண்டும். இலிங்க தாரிகளில், பஞ்சம சாலியர், பணஜிகர், ஒக்கலிகர், குடியொக்கலிகர். ஸஜ்ஜனர், கௌடர், மலவ கௌடர், ஆதி பணஜிகர், சைன பணஜிகர், சிவசிம்பிகர், ஜாடர், சாதர், நோணபர், கவளிகர், ஹடிகாரர், தேவாங்கவர், ரட்டியார், துருகாண்யதவர், சந்திரகுண்டர், லாளகுண்டர், நகர்த்தர், நேகாரர், பத்மசாலியர், பூக்காரர். அர்ச்சகர், அச்சநூலிகர், கம்மாரர், கும்பாரர், குரும்பர், உப்பாரர், பாதரதவர், அகசர், க்ஷவரகர், வண்ணூர் முதலிய பலசாதியர் இருக்கின்றனர். இந்த சாதியர்களில் தரும சாஸ்திரப்படி வேறுபாடுகள் இருக்கின்றன. பசவாசாரரது உபதேசப்படி மனிதர் தம் தம் சாதிகளை யெழுதாமல் கேவலம் மதத்தின் பெயரையே எழுதினல் இன்னூர் உத்தம சாதியாரென்றும்; இன்னூர் கனிஷ்ட சாதியாரென்றும் அறிய முடியாமல் க்ஷவரகர் என்பது முதலியன போல் யாவரும் பணஜிகரே முதலானவராதல் வேண்டும். இந்த தருமத்தின் நுட்பத்தை யுணராது யாதோ ஒரெண்ணத்தைக் கொண்டு கடைத்தரமானவர் மேலானவருடன் கூடி யாவரும் சமானராக வேண்டுமென்ற பேரவாவினல் மனதிற்றோன்றியவாறு கூறுகின்றனர். அவரது சொல்லுக்கு யாரும் செவிகொடுக்கலாகாது. தாய் தந்தையர் அங்கஹீன முதலிய குறைபாடுடையராயினும் புத்திரன் அவரது பெயரைக் கூறுதல் போலத் தாம் பிறந்த சாதி எப்படிப்பட்டதாயினும் அன்புடன் அதன் பெயரைக் கூறுதல் வேண்டும். இங்ஙனம் கூறுவதே உண்மையான புருஷலக்ஷணம். ஆதலினல் சென்சசில் முதலில் தமது மதத்தின் பெயரை எழுதுவித்து பின்னர் சாதியின் பெயரையும் எழுதுவித்தல் வேண்டும். பசவாசாரம் உடையவர்களாயினோர் தமது மதத்தின் பெயரை "வீரசைவர்" என்று கூறுதல் வேண்டும். இங்ஙனம் எழுதுவிப்பதே வேதமார்க்கா வலம்பிகளது தருமமாகின்றது. ஆதலினல் வீரசைவ மதாசாரமுடையோர் இந்த தருமத்தின் நுட்பத்தை யறிந்துகொண்டு பசவாசாரர்களது வலைக்குள் வீழாது தத்தம் சாதியின் பெயரைக் கூறி எழுதுவித்து பரமாத்மாவின் கருணைக்குப் பாத்திரராக வேண்டுமெனக் கோருகின்றேன்.

பத்திராதிபர் குறிப்பு:—சமயாபிமானிகளே! மேற்கண்ட கட்டுரையால் வீரசைவ மதம் பரவி மேன்மை யுற்றிருக்கும் வடநாட்டின்கண்

வீரசைவ மதாசாரம் உடையவர்களுள் பசவாசாரம், கணசாரம் என இரண்டு பிரிவுண்டென்றும், பசவாசாரர் யாவரும் சாதி பேதத்தை யொழித்து மதத்தின் பெயரால் அழைக்கப்படல் வேண்டுமென்றும், முறையே இலிங்காயதர் வீரசைவர் என அழைக்கப்படுதல் வேண்டு மென்றும் வாதம் புரிகின்றனர் என்றும் அறிகின்றோம். ஆனால் அவ்விருவருள், சாதியின் பெயரை விடுவிக்க வேண்டு மென்பாரது நோக்கம் சாதிப் பிரிவினையால் சமூகத்தின் பெருக்கம் குறைகின்ற தால் மதத்தின் பெயராலேயே அழைக்கப்படுதல் வேண்டு மென்பது. சாதிப் பிரிவினை யிருக்கவேண்டு மென்பாரது கருத்து அப்பிரிவினை யின்றேல் வேத நெறியாகிய வருணாச்சிரம தருமம் குறைந்துவிடும் என்பது. இருவருடைய கருத்துக்களும் மேலானவைகளே. எனி னும், சாதிப்பிரிவினை யுண்மையினாலும், இன்மையினாலும் ஓர் மதா சாரத்தைப் பின்பற்றிய சமூகத்திற்கு ஓர் பெருத்த குறைவு நேரா தல்லவா? சாதியின் பெயரைக் கூறுததனாலேயே சாதித் தன்மை ஒழிந்து போய்விடாது. சாதியின் பெயரைக் கூறிக்கொண்டதனாலே வருணாச்சிரம தருமம் நிலைபெற்றுவிடாது. ஒவ்வொருவரும் தத்தம் மத தருமங்களை யுணர்ந்து அனுபவத்தில் அன்புடன் கையாண்டு வருவதனாலேயே அவை யிரண்டும் நிலைபெறும். அவற்றை விடுத்து சாதி சாதியெனக் கரைவதனால் வீரசைவ மதம் நிலைத்து விடுமா? விரோத பாவனையும், முற்போக்குத் தடையுமே ஏற்பட்டு விடுமென்ப தில் யாதும் ஐயமில்லை. இச்சண்டையை விடுத்து சமயமும் சமூக மும் முன்னேற்றம் அடைவதற்கான முக்கியமான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டுவதுவே சமயச் சீர்திருத்தம் எனப்படும். யார் இலிங்கதாரிகளாய் ஆசாரிய அனுட்டானத்தை விடாது இருக்கின் றனரோ அவரெல்லாம் வீரசைவரென்றே சொல்லிக் கொள்ளலாம். அப்பொழுதுதான் வீரசைவமென்னும் பாற்கடல், பல அபேக்ஷகர் என்னும் நதிகளைத் தன்னுள் ஏற்றுக்கொள்ளும் பெருமையை யுடைய தாகும். அதனால் இந்த மதத்திற்குக் குறைவு வாராது. இதைப் பற்றிச் சமூக சேவை செய்வோரும், மடாதிபதிகளும் ஆராய்ந்து ஆவனவற்றைச் செய்ய இறைவன் அருள்புரிவாராக.

முசிரி போர்டு ஹைஸ்கூல்

புதிய கட்டடத் திறப்புவிழா.

முசிரியில் ஹைஸ்கூல் தொடங்கப்பெற்று சுமார் 12-வருடங்களாகின்றன. இதுவரை வாடகைக் கட்டடத்திலே இருந்துவந்தது. பிள்ளைகளும் உபாத்திமார்களும் இடம் போதாமையினால் தந்தொழில்களைச் சரிவரச் செய்ய முடியாமல் இருந்தது.

இப்போது திருச்சி ஜில்லா போர்டு தலைவராக இருக்கும் கனம் **T. M.** நாராயணசாமி பிள்ளை M. A., B. L., M. L. C. அவர்கள், உபத் தலைவர் மின்னும்பள்ளி ஜமீன்தார் கனம் **K. C.** முத்துவேங்கடாசல ரெட்டியார் M. L. C. அவர்கள், இவ்விருவர்களும் தாம் எடுத்துக் கொண்ட பெருமுயற்சியால் தொடங்கிய ஒன்றரை வருடத்தில் இக் கட்டடம் அழகுடன் செம்மையாகக் கட்டி முடிவு பெற்றுள்ளது.

29—12—1930 சென்னை மாகாண பொதுநல வமைச்சர் கனம் **P. T.** ராஜன், பாரட்லா அவர்கள் இக்கட்டடத்தைத் திறந்துவைத்து விழாவைச் சிறப்பித்தார்கள். திருச்சி நாஷனல் காலேஜ் பிரின்ஸ்பால் திரு. சாரநாத அய்யங்காரவர்கள் ஆங்கிலத்திலும், பாதிரிக் கலாசாலை தமிழ்ப் பண்டிதர் திரு. நடேச முதலியாரவர்கள் தமிழிலும் கல்வி நலத்தைப்பற்றி அரிய சொற்பொழிவு செய்தார்கள். சிற்றுண்டி வழங்கப் பெற்றது. கோலாட்ட முதலியன நடைபெற்றன. பல கனவான்கள் விஜயஞ் செய்திருந்தார்கள். போர்டு தலைவர்கட்கும், உபாத்திமார்கட்கும், மாணவர்கட்கும், கண்டிராக்டர் கனம் கணபதி ரெட்டியாரவர்கட்கும், பிறருக்கும் இறைவன் நீண்ட ஆயுளையும் புகழையும் கொடுத்தருள்வாராக. இப் பாடசாலையின்தான் இத்தமிழ் நாட்டில் 10 மாணவர்கள் உபகாரச் சம்பளம் பெற்று மேல் வகுப்பு வரைப் படித்து வருகின்றார்கள். அவர்கள் இன்னும் வளர்க!

தமிழ்நாட்டு நிகழ்ச்சிகள்.

திருவிதாங்கூர் விஜயம்.

பெங்களூர், இராஜசபா பூஷண சர். கெ. பி. புட்டண்ண செட்டியாரவர்கள் சென்னையிலிருந்து திருச்சிராப்பள்ளி வழியாக 17-12-30 தேதியில் தமது தரும பத்தினியுடன் திருவிதாங்கூர் அரசரால் விருந்தினராக அழைக்கப்பெற்றுப் போயிருக்கின்றார்கள். அவ்வரசாங்கச் சீர்திருத்த விஷயமாக ஒரு மாதம் வரை அங்கு தங்குவார்களெனத் தெரியவருகின்றது. இப்பெரியார் வயதினும் பெரியாராயினும் இவரது மதி நுட்பத்திற்கு விரும்பி யாவரும் ஏற்கின்றனர். இவர் இன்னும் நீண்ட ஆயுளுடனிருந்து வீரசைவ சமயத்திற்கான நன்மைகளைச் செய்க எனத் திருவருள் வேண்டப்பெறுகின்றது.

இராமேஸ்வர யாத்திரை.

வீரசைவப் பெரியாரும் சமயத்திற்காகப் பாடுபடுபவரும், அதிசுலபரும், சீமானுமாகிய கொள்ளேகாலம் தாலூகா போர்டுத்தலைவர் திருவாளர் **G. P.** மல்லய்யா அவர்கள் தமது மனைவியாருடன் பழனி இராமேஸ்வரம் முதலிய திவ்யஸ்தல யாத்திரை செய்து முசிரி திருச்சி முதலிய வழியாகச் சிதம்பரம் ஆருத்திரா தரிசனஞ் செய்து தமது சொந்த ஊருக்குச் சென்றிருந்து இன்புறுவார்கள். ஸ்ரீ நடராஜப் பெருமானருளால் தற்போது பாலக்காடு காலேஜில் இண்டர்மெடீயெட் வகுப்பில் படித்துக்கொண்டிருக்கும் பாலகந்தருவ **G.M.** நடராஜய்யா என்னும் இவரது புதல்வர் சங்கீத முதலிய கலைகளில் முன்னேற்றமடைந்து வீரசைவ சமூகத்திற்குப் புகழையுண்டாக்குக.

சுபம்! சமாஜ சேவகன்

சந்தா விவரம்.

ஆயுட் சந்தா	... ...	ரூ. 25–0–0
ஆண்டுச் சந்தா	... ...	,, 2–0–0
மாணவர்கட்கு ஆண்டுச் சந்தா	...	,, 1–8–0
தனிப்பிரதி	... ...	,, 0–3–0

விளம்பர விகிதம்.

பக்கம் 1-க்கு	மாதம் 1-க்கு	... ...	ரூ. 5–0–0
,, ½-க்கு	,,	... ...	,, 3–0–0

தஞ்சை, கரந்தை தமிழ்ச்சங்கத்தில்,

திருவாளர். அ. வரதநஞ்சையப் பிள்ளையவர்கட்கு

ஆசிரியர் பட்டமும், பொற்பதக்கப் பரிசும் வழங்கியபோது

இலத்திவாடி சமீன்தார் திருவாளர்,

R. E. சின்னசாமி இரட்டியார் அவர்கள் பாடிய

வாழ்த்து.

உலகெ லாம்புகழ் செந்தமி ழன்னையாள் உவக்கும், திலக மாகிய
செல்வ! நாலலம் பெறும் திறலோய்!, நிலவு லாமுடி யிறையடிக் கடிமைசெய்
நெறியோர், குலவ! வாழி சீர் வரதநஞ்சைப் பெயர்க் குரிசில்! 1

தந்தை யீந்தனன் பெருநிதி; தாய் உடல் வளர்த்தாள்;
இந்த வான் பொருள் இரண்டையும் நல்வழி இயக்கும்
சிந்தை யீந்து நீள் புகழொடும் புண்ணியம் செறித்தாய்;
எந்தை தாயினும் குரவ! நீ இனியை யால்எனக்கே!. 2

ஐம்பு லன்வழி யின்பெலாந் திவலையே யாக, இம்பர் வான்றமி
ழின்பமாம் சலதியுள் இயைத்தாய்; உம்ப ராரமிழ் தென்னினும் தூவென
உமிழ்வேன்; எம்பி ரானடி தந்ததும் தமிழலால் யாதே? 3

"எந்த வேளையும் இணையடி இருதயம் பதியக், கந்த வேளையே
வழிபடு கடுந்துய ரடா, வந்த வேளையந் தீந்தமிழ் துதி" யென வன்மை,
தந்த வேளைய வரதநஞ் சையப் பெயர்த் தகையோய்! 4

பருதி வானவன் தண்மதி உடுக்கணம் படைத்த, சுருதி வானவன்
திருவடித் தொழும்பினில், உவகை, கருதி மானவர் கருப்புரங் காட்டுதல்
கடுப்பத், தருதி யான் மிடலளித்தநின் றனக்கொரு மடலே. 5

சீர்த்த நூல்சில இயற்றினை; சேக்கிழார், கம்பர்
யாத்த நூற்குரை யுரைக்குவை; நம்பியோ டெனக்கும்
கோத்த மாணவர் பலருக்குந் தமிழ்வளங் கொடுத்தாய்;
பாத்த மூவகைக் குரவனும் பண்புபெற் றனையால், 6

ஆய்ந்து நின்றனக்கிச்சிறப் பளித்த நாவலவ, வாய்ந்த வண்டமிழ்க்
கரந்தையம் பேரவை மன்னன், ஏய்ந்த சீருமா மகேசுரப் பேர்பெறும் எந்தற்.
கீந்து யான்புரி தாத்தகைம் மாறுமற் றியாவே? 7

வாழி நின்செயல்; இன்றமிழ் வளம், சவையனைத்தும், ஆழி சூழுல
கெங்கணும் பரப்பி, எம் மையன், சூழி ருந்திரு வருள்பெறுந் துறையெலாந்
துலக்கி, வாழி யூழிநீ வாழியென் றரனை வாழ்த்துவமே. 8

வெண்பா.

வாழி கரந்தை வளமார் தமிழ்ச் சங்கம்
வாழி தமிழணங்கு; வண்டமிழோர்—வாழியரோ
ஆசிரிய ராந்தகைசால் அண்ணல் வரதநஞ்சத்
தேசிகனார் வாழி சிறந்து.